# கனட்டி

த.மலர்ச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனட்டி

---

த. மலர்ச்செல்வன்

தாயதி வெளியீடு - 08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனட்டி
(கவிதைகள்)
ஆசிரியர்: த. மலர்ச்செல்வன்

*Kanatti*
*(Poems)*
*Author: Thangarajah Malarchselvan*
© *Malarchselvan*

*First Edition - January 2022*
*Book & Cover Design: rashmy*

*Published by - Thayathy*
*+41 793343522*
*thayathy12@gmail.com*

*Price:* *SLR 630.*
*INR 110.*

*Distribution in India:*
*Bharathi Puthakalayam*
*No:7, Elango Salai*
*Teynampet*
*Chennai- 600018*
*Phone: 044 24332924*

ISBN: 978 81 9078 917 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி

றஷ்மி
தில்லை
உயிர்நிழல்
உயிர் எழுத்து
மூன்றாவது மனிதன்
கலைமுகம்
மறுபாதி
மறுகா
தினகரன்
விடியல்
கவிதாசரண்
தேனகம்
களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதையில் முடிவுறா எதிர்மொழி

கிழக்கில், வாசிப்பிலும் எழுத்திலும் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த 90களில், கவிஞர் மலர்ச்செல்வன் அதிக ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் மட்டக்களப்பின் பல்வேறு இலக்கியச் செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு, இன்றுவரை இயங்கிக்கொண்டுமிருக்கும் செயற்பாட்டாளன். கவிஞர் மலர்ச்செல்வனின் தீவிரமான வாசிப்பும் தேடலுமே படைப்புகள் மீதும் படைப்பாளிகள் மீதும் மிக இறுக்கமான விமர்சனத்தை முன்னிறுத்துகிறது. எதிர்க் கருத்துக்களை உடனுக்குடன் துணிந்து முன்வைப்பதில் எந்தப் பாராபட்சமும் அவரிடம் இருப்பதில்லை. தான் வாழும் சமூக உணர்வுகளின் அடுக்குகளை, தனது எண்ணங்களில் தொற்றிக்கொள்ளும் வடுக்களை தனது கவிதைகளில் தனித்துவத்துடன் வெளிப்படுத்திவருகின்றார்.

கவிதைக்குரிய காட்சிப்படுத்தலும் சாதாரண சம்பவங்களை பின்னிப்பிணைத்து கவிதைகளைத் தொன்மங்களுடன் முடிச்சுப் போடும் பாங்கும் அவருடைய கவிதைமொழியின் தனி இயல்பு. பின் நவீனக்கூறின் உட்பாய்ச்சலும், தொன்மக் கட்டுடைப்பின் உருவேற்றலும், படிமத்தின் சுருட்டல்களும் விரிந்த தளத்தை இவரின் கவிதைகளுக்கு கொடுத்துவிடுகின்றன.

உடைபடும் வானத்தின் மின்னல் கோடுகளாக துடித்தெழும் ஆவேசத்தின் பேரிடி முழக்கமாக காலத்தை இணைத்துக்கொண்டு எழுதப்பட்டுள்ள இந்த 'கனட்டி' தொகுப்பிலுள்ள கவிதைகள், திகிர்க்கும் உள்ளொளி உச்சாணி மேவுகை இயல்பை இரட்டிப்பாக்கி வாசகனோடு இரண்டறக்கலக்கின்றன.

தொகுப்பு வருவதில் மிகுந்த நம்பிக்கை கொண்ட றஷ்மி. ஒத்துழைத்த கவிஞர் மலர்ச்செல்வன். வழமையான அன்போடு 'தாயதி' வெளியீடுகளுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் சிராஜ் (பாரதி புத்தகாலயம் - இந்தியா) ஆகியோருக்கு நிறைந்த பேரன்பு.

வாழ்த்துக்கள் மலர்ச்செல்வன்.

**- தில்லை**

**'தாயதி' சமூக செயலூக்கத்திற்கான முன்னோடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை நான் எடைபோட்டுப் பார்க்கின்றேன்

என்னுடைய முதல் கவிதைத் தொகுப்பு 'தனித்துத்திரிதல்' வெளிவந்து பதினாறு வருடங்களைக் கடந்துவிட்டன. மிக நீண்ட இடைவெளியின் பின் எனது இரண்டாவது கவிதைத் தொகுப்பான 'கனட்டி' வெளிவருகின்றமை பெரும் மகிழ்ச்சியான விடையமாக எனக்குப் படவில்லை.

கவிதை பற்றியும் அதன் ஊடுபாய்வு பற்றியும் நம்பிக்கையற்றிருந்த எனது மனம், தரிசு நிலத்தில் பாலிறைக்கும் அம்புலியின் பொன்னிற ஒளியைப் போல்த்தான் பயனற்று என்னில் உறுண்டுகொண்டிருந்தது. பின் கவிதை மனம் மூலையில் உறங்கிக் கிடந்து அவ்வப்போது எட்டுவதோடு நின்றுபோனது.

ஆனால், இன்றைய கவிதைகள் ஆசையின் வெளிப்பாடாக மட்டுமே நிற்கின்றன. எந்த உயிர்த்துடிப்பையும் ஒரு வகை உந்துதல்களையும் தந்துவிடாது பிரக்ஞை அற்றே கிடக்கின்றன.
இதற்குள் நான் என்னத்த ஓட்டப்போகின்றேன்? இந்தக் குறுகிய மனம் நிமிடத்திற்கு நிமிடம் செக்கனுக்குச் செக்கன் எழுந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு மகுடம் சூட்டுவதாக.. கவிஞர் லஷ்மி மணிவண்ணன் "தரமான கவிதையை எழுதுவதென்பது மிகவும் சாதாரணமானது. தரமற்ற கவிதையை எழுதுவது எனும் சவாலான காரியம் இன்னதென்ன ஊகிக்கவோ, அனுமாணிக்கவோ திட்டமிடவோ இயலாதது. தரமற்ற கவிதையில் இன்றைய கவிஞன் விருப்பம் கொள்ளவேண்டும்." என்கின்ற எதிர்மறைக்கருத்து, உள்ளொலியாக.. இறங்கி, என்னுள் ஆர்ப்பரித்த கவிதைகள் இறந்து கொண்டிருந்தன.

இந்த அதிர்ச்சி மாறாத தருணத்தில் "ஈழத்தின் தெருவுக்கு தெரு, வீதிக்கு வீதி முளைக்கின்ற கவிஞர்களை பூச்சிகொல்லி மருந்து விசிறி கொல்லவேண்டுமென ஜெயமோகன் வீச்சு அரிவாளுடன் பெரும் உதையை உதைத்தபோது.. நானும் பூச்சிகொல்லி மருந்துக்கு மாண்டுபோவேன் எனப்பயந்து பதினாறு வருடப்பயத்தை பொத்திக்கொண்டு அகழியில் உறங்கிவிட்டேன். 'கொஞ்சநாளைக்கு' முன்தான் றஷ்மிதான் என்னைத் தட்டிஎழுப்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதும் என் மனம் விருப்பம் கொள்ளவில்லை. பின் அவனின் இரண்டாம் சாமத்தின் கதவு திறக்கப்பட்டபோதே நான்'பொட்டளவு பச்சமண்' என்றேன்.
இது.... ஞாபகத்தின் வேறுகோடாகத்தெரிகின்றது என்றான். பின், பனையடித்தெருவில் 'கனட்டி'யை புறக்கியெடுத்தேன்.

நண்பர்களே! இப்போ என்னை எடைபோட்டுப்பார்க்கின்றேன். என் கவிதைகள் நீடித்து வாழுமா? இல்ல குற்றுயிரில் மாண்டுபோகுமா? என்று எனக்குத்தெரியவில்லை. ஆனால் அவர்களின் கவிதைகள் புற்றீசலாகவே பறக்கின்றன. என் சமகாலப் பொட்டுப்பூச்சிகள் என்னை தோளில் சுமந்து செல்கின்றன.

வாழ்வெளியின் சூத்திரங்களும், ரகசியங்களும், வேதனைகளும், சோதனைகளும், கழுத்தறுப்புக்களும், பின்முதுகுத் தாக்குதல்களும்... எப்போதும் துரத்திக்கொண்டிருக்கும் வசை முகிழ்ப்புக்களும் தேன்பூச்சிகள் போல் என்னில் மொய்க்கின்ற என் தாய்மொழி என்னைப்பற்றிக்கொண்டு ஒற்றையடிப்பாதைக்கு வழிகாட்டுகிறது. நான் நடக்கின்றேன் நண்பர்களே!. பார்ப்போம் வந்து சேர்வெனோவென்று.

இந்தப்பாதைபோட.... தூசிபடிந்து, உறங்கிக்கிடந்த கவிதைகளைப் பொருத்தி கைகாட்டிய நண்பன் றஷ்மிக்கும், வெளிப்படுத்தலே இல்லாமல் அமுங்கிக்கிடந்த தில்லைக்கும் தாயதிக்கும் மற்றும் என் கிழட்டுக் கவிதைகளை பாதணியற்று ஓடவிட்ட இதழ்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கோடானகோடி நன்றிகள்.

**த.மலர்ச்செல்வன்**
**ஆரையம்பதி-03**
**17.12.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## x வார்த்தைள்

நான்
எதிர்பார்க்கவில்லை.
x யின்
வார்த்தைகள்
என்
அடித்தொண்டையில்
கசக்கத்தொடங்கிவிட்டன.

கரகரத்து வீங்கிப்போன
தொண்டைக்குழி
பலூனொன்றாய்
பெருக்கம் காட்டத்தொடங்கிவிட்டது.

எத்தனை தடவைதான்
x யிடம் சொல்வது
சனியையும்
அவன் வாகனத்தையும்
நான்
நம்பேனென்று.

xயின் புகழுக்காய்
என்
உயிரைக்கொடுத்தேன்
உணர்வைக்கொடுத்தேன்
மூளையைக்கூடக்கொடுத்தேன்
x
மீண்டும் மீண்டும்
கரியநிறத்தையே
பேசுகிறது.
விரும்புகிறது
அவாவுகிறது.
............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்குரல் உடைந்துவிட்டது
குயில் பறக்கத்தொடங்கிவிட்டது
சனியின் தைரியம்
x யின்
உடல்முழுதும்
பாயத்தொடங்கிவிட்டது.

நேரேற்றமும்
மறையேற்றமும்
நிலம்முழுதும்
அதிர்கின்றது.
தட்டுக்கள்
ஆழத்தில்
கடகடவென
அலறுகின்றன.

நானொரு பீச்சான்
எனக்கு
செட்டைகள் முளைக்கத்தொடங்கிவிட்டன.
கறுப்பும்
சாம்பலுமாய்..

நான் இப்போ
உச்சிமட்டையில் நின்று பார்க்கிறேன்.

X
Y
Z

25.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெட்கம் துறத்தல்

'எக்ஸ்'
அப்பிளை நீட்டினாள்
நான் வெட்கம் துறந்துவிட்டேன்
இன்னும் எதற்கு?

மரம் நீளத்தொடங்கியது
"புன்னைமரமே
புன்னைமரமே
இன்னும் இன்னும்
நீளாயோ?"

கடல் கொந்தளித்தது
அலைகள் எழுந்து
பள்ளத்துக்குள் மடிந்தன.

கனியின் சுவையை
தித்திக்கும் கிளி,
யுகம்யுகமாய்
பேசியது.
பேச்சு...
யாரு கண் பட்டதோ?
குடல் அறுந்து
விசிலடித்தது
பெருங்குடல்
பின்,
இடிதாங்கியில் விழுந்து
நூற்றாண்டு வெளிச்சத்தை
தோற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்' எக்ஸ்'
குறுக்குக்கட்டோடு நின்றாள்.

புன்னை வளரத்தொடங்கியது
அவள்சற்றும்
எதிர்பாராப்பொழுதில்
பெண்ணலையாய்
மாறியது எப்படி?

முறுக்கேறியபொழுதில்
அக்கினியன்
வஸ்திரத்தை உரிந்தான்
ஏழுகுதிரைகளும் தாவின.

அவளோடலான எல்லா உறவையும்
துறந்துவிட்டேன்.
காகம் அவள் உயிர்.
வெட்கம் கெட்டவள்.

என் வடையைப் பலதடவை
ராஞ்சிய "திருடன்"
இந்தச்சொல்லை வெறுக்கிறேன்.
"கள்ளன்"....
சொற்களைக் கிழித்தெறிகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இடுப்பில் முளைக்கின்ற
'செக்கோசெலபியா' நயின் எம் எம்'
கையில் எடுத்து நடக்கிறேன்
சீராட்டி ஓடைக்கட்டில்
'எக்ஸ்'
வெட்கம் துறக்காதவளாக
பெருத்தெழுகிறாள்
9 M M நீள்கிறது.
நான் அமெரிக்கன் அப்பிளை நீட்டினேன்
ராஞ்சினாள்
காக்கைகள்
என்னுள் வளர்ந்தன.
இனவாதியென்றாள்
வெட்கம் துறந்துவிட்டாயா கண்ணே?
என் குரல் எழவில்லை
எனக்குள் அடங்குகிறது.
பாவம் என்னுள் வளர்ந்தது..
'எக்ஸ்'அழுதாள்
அப்பிளை ச் சபித்தாள்
ஆதாம் எங்கே?
கூச்சலிட்டாள்.
நான் வெட்கம் கொண்டேன்.

நான் இனவாதியாகிறேன்
நீ...நீ...வெட்கமாயிரு.

16.10.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயாஜாலம் அல்லது நீலமென்றொரு கடல்

நீங்கள் எல்லோரும் உருவாக்கிய கடலில்
நான் நீந்தத்தெரியாத மீனாக...
என் மாயாஜாலம் விரிகிறது.

சிறகிருந்தும்
செதில்கள் இருந்தும்
உங்கள் கடலில்
நான் நீந்தமுடியாமல் தவிக்கின்றேன்.

என் அற்ப ஆயுளுக்குள்
உப்பு என்னை அரித்து...அரித்து..
என் வருடங்களை விழுங்குகிறது
இது எப்படி உங்களுக்குப்புரியும்?

ஒவ்வொரு கணங்களும்
எனக்கான கடலைத்தேடுகிறேன்
அசைவற்று
ஆர்ப்பரிக்காத
நீலம் என்னும் பரவையை...

நீங்கள்
என் மாயாஜாலம்பற்றிப்பேசுகிறீர்கள்
நான்
உங்கள்
கடல் பற்றி அலம்புகிறேன்.

என் கடலே
எங்கு இருக்கிறாய்?
எங்கு ஓடிக்கொண்டிருக்கிறாய்?
நீலங்கள் நிறைந்த
உன் மாயாஜாலத்தில்
நானும் நீந்தவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உயிரும்
என் உடம்பும்
என் ஆசையும்
பெருக்கெடுக்காத கடலாக
எப்போ தோன்றும்?

ஆதியில் தோன்றிய கடலே
நீ எப்படித்தோன்றினாய்?
சிவப்புக்களும்
சிதிலங்களும்
முண்டங்களும்
உன்னை
துர்வடையச்செய்யவில்லையா?

என் வழி முழுதும் மணற் குவியல்கள்
நிறைந்த
பெருவெளியில்....

என் காதுகள் கோரத்தாண்டவத்தைக்கேட்கின்றன.
என் மூக்கு துர்வாடையை நுகர்கின்றது.
என் மண்டைமுழுதும் வீகாரங்கள் நிறைந்து
பித்துப்பிடித்துக்கிடக்கிறது.
என்வாழ்வு என்னைவிட்டு..விட்டுப்போகிறது.

கடலே
நீ தோன்றுவாயா?

தோன்றமறுக்கும் நியதியில்
என் குரலற்ற குரலைத்தேடுகிறேன்
அது
நீலப்படுக்கையை மீட்டிவரட்டும்.

05.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**..... எது ?**

X யின் எல்லாக்குணங்களையும்
Yயிடம்
சொல்லிக்கொண்டிருக்கும்போதே.
..... முலையை
புறக்கியெடுத்தோம்.
ஒரு சொட்டும்எரியவில்லை.

பேழை கடகடக்க
நிலம்பிளந்தது.

ஊருக்குள் சலசலப்பு
தீயாய் பரவ
"X"பச்சைத்தேரில் போய்க்கொண்டிருந்தாள்.
கண்ணால் கண்டதை யாரிடமாவது
சொல்லலாமென்று ஓடினேன்
ஊர் கரியாய் கிடந்தது.
அழுதுகொண்டிருந்த சன்னியாசி மட்டும்
முனங்கி..முனங்கி
தரையில் நீந்தினான்.
அலையெழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
வெகுநேரமாய் ஓலமிட்டேன்.
மலைகள் நகர்ந்து என்னருகில் வந்தன.
விடாதே அவளை.
கொலைகாரியைப் பிடித்துத்தாருங்கள்
என் கையை நீட்டினேன்.
இன்னும் ஐந்து நிமிடத்திற்குள்
அவள் தலை வேண்டும்.

அகோரிகள் கர்ச்சித்தனர்
நான் ஊழிக்கூத்தாடினேன்.

காரண காரியங்கள்
எப்போ அலசப்படும்?
நம்பிக்கையற்றவாழ்வு
என்னுள் சாராய் ஊற்றுகிறது.
மாதவிடாயை மிஞ்சி
என்னை அறுக்கிறது.

முலை ஒரு
வெடிகுண்டா?
முலை ஒரு அபினா?
முலை ஒரு பூகம்பமா?
சூறாவெளியா?
சுனாமியா....?
எது....எது...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"X" ஐ மீண்டும் வடிக்கத்தொடங்கினேன்
அவள் உயிர் கொள்ள முடியாமல்
அந்தரிக்கிறாள்
எப்பாடு பட்டும் வடிப்பேன்
பச்சைத்தேரில் போன
கோமாளியனையும்
புதர்கள் மண்டிய காஞ்சொன்னி வெளியில்
கறும்புள்ளி ..செம்புள்ளி... குத்தி
அவனின் ஊர்வலத்தில்
அவளும் மாயவேண்டும்.

முலை அமுதசுரபி
முலை உயிர் வளரி
என்பிள்ளைகள்
பூரிக்க...
'மொச்ச' மணத்துடன்
என் குழந்தைகளை அணைத்து
அவளை விடாதீர்கள்.
பெருமூச்சு
என்னைத்தீய்க்க..
A,B,C,D,E,F,G.....L,M,N,O....X,Y,Z

16.10.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்போ என் குரல் கேட்கிறதா?

எலிகள் உருட்டிய சத்தத்தில்
திடிரென எழுந்திருக்கிறேன்.
அவனைப்பற்றிய
என் இதயக்குமுறல்
உங்கள் காதுகளுக்குக் கேட்கவில்லை.
மிக நெருக்கடியிலே
என் பேனா
அவனைக்கக்கியது
ஆனால் உங்கள் செவிகளுக்கு கேட்கவில்லை.

இப்படித்தொடங்கியிருந்தேன்
மறுக்கப்பட்ட விடுமுறை
என்னால் கூடமுடியவில்லை
சிறகுடைந்த பறவையை
நான் கையில் ஏந்தி வைத்திருக்கிறேன்
நீங்கள் நம்பமாட்டீர்கள்.
என் பிரமையின் எல்லையில்
அது பறக்கிறது
நீங்கள் உணரமாட்டீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கூடியிருந்தால் அறிந்திருக்கலாம்

முடியவில்லை
என்னைத்தடுத்துவிட்டது
விடுமுறை
அவனை நினைத்து
ஒரு ஒப்பாரிதான் அழமுடியும்

பறவை பறக்கட்டும்
நான் புலம்பித்தான் என்ன செய்யமுடியும்?

பறவைகளின் கூடு நிரந்தரமில்லை
நானும் கூடற்றவள்

இப்போ என் குரல் கேட்கிறதா?

18.10.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திறந்துகிடந்த கதவினைச் சாத்திவிட்டு**
**சித்தார்த்தன் என்னுடன்**
**பேசிக்கொண்டிருக்கிறான்.**

அதிகாலைப்போதனையை நான் வெறுத்து
பலவருடங்கள் கடந்தோடிய பின்னும்
இன்றும்...
கனவுகளாய்ப் போனவாழ்வின்
அர்த்தங்களையும்
ஏமாந்துபோன காற்றின் முடிச்சியினையும்
அவிழ்த்துக்கொண்டே இருக்கிறான்.

எத்தனை தடவைதான் கேட்பது....?
என் மண்டையில் மீதமுள்ள மயிரைக்கூட
என்னால் காப்பாற்ற முடியவில்லை.

மூச்சுவிட முடியாத காலத்தின்
அரச நிழற் குடையிலிருந்து,
தப்பியோடிய நாட்கள் கண்ணுக்குள் விரிந்தன.

கதவு தட்டப்பட்டது.
வார்த்தடியினை போடச்சொன்னான்.
இனி எதுபற்றியும் பேசுவதற்கில்லை...

முட்கம்பிகளுக்குள் நான் சிக்கிக்கிடந்தபோதும்
இதையே சொன்னான்.

இன்றும் இதையே சொல்கிறான்.
நாளையும் இதையே சொல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனின் கனல் என்னைச்சுட்டெரிக்க
கதவைத்திறக்கின்றேன்.
நாசமாப்போனவன்
செத்துக்கிடக்கின்றான்
என் கட்டிலில்.

எங்களுக்கிடையிலான
பல வருட உறவு வீழ்ந்து கிடக்கிறது.
போதனைகளைக் கேட்பதற்கும்
சொல்வதற்கும்
ஆட்களற்ற ஏகாந்த வெளியில்
நடக்கின்றேன்.

மாடுகள் மேய்வதற்கும் நிலமற்று..
சோளன்கள் என்னைத் துரத்துகின்றன....

மீதமுள்ள நடையினை நிறுத்திக்கொண்டு
தேய்ந்து போன போதனைகளை
விடத்தொடங்கினேன்.
என்னைத் தூக்கிக்கொண்டு
வம்மி மரநிழலில் ஒரு கூட்டம்
ஆடைமாற்றிக்கொண்டிருக்கின்றனர்.

இனி என்பாடு கொண்டாட்டம்தான்.
செய்தித்தாள்களிலும்
தொலைக்காட்சிகளிலும்
இணையத் தளங்களிலும்
நான் ஏறப்போகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோளன் என்னை நோக்கி
வந்துகொண்டேயிருக்கிறது.
சுசனத்தைச்சுழற்றச்சொல்கிறார்கள்
அடே பாவிப்பயல்களே..
என்னிடம் குரல் மட்டும்தான்...உண்டு...

சித்தார்த்தன் எப்படி என் கட்டிலில்
செத்துப்போனான்?

பாவிப் பயல் அதையாவது சொல்லித்
துலைத்தானா?

அடி வயிற்றைக் கலக்குகிறது
மர்மம் என்னுள்
பேரொளியாய்..
நாலு லெட்சத்து எண்பத்தெட்டாயிரத்து
ஐநூற்றெழு கொண்டு
பூம்பிஞ்சாய் வளர்கிறது.

01.01.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாக்குச் சிறுக்கத்தொடங்கிவிட்டது

அறுக்கப்பட்ட
என் நாக்கைப்பொருத்துகின்றேன்.
சொற்கள் உதிர்கின்றன
வார்த்தைகள் மறைந்துபோகின்றன
பாழடைந்துபோன மாளிகையில்
சுவை மெல்லமெல்ல
அழிந்துபோகின்றது
முதலையைப்போல்.

அறுந்து ஒடிந்துபோன கர்ணநாதத்தை
காதுகள் கேட்கின்றன.

குடம்முழுதும் நிறைந்திருக்கும்
உதிரத்தைக்குடிக்கின்றேன்
ருசி அடங்கி
நாக்குத்தொங்குகிறது.

வச்சிரம் கடலில் துள்ளி
என் நாவில் விழுகிறது
பட்டோலை பரிந்துரைப்புக்கள்
இரைகின்றன.

எந்தத்தாகமும்
நாக்கில் ஊற்றெடுக்க
மறுத்து
...........
நீதியை
அவர்கள்
சொல்லுவார்கள் என
நுனி நாக்கில்
தொங்கிக்கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றும் முன்தான்
தண்டனக்கோவையின்
'வீ' பிரிவில்
கொலம்பஸ் இறங்கியிருக்கிறான்.

சட்டென...
எல்லாச் சுவையும்
நாக்கில் ஊறுமென
நான் கனவு கூடக்கண்டதில்லை
இனிப்புத் தித்திக்கிறது
..........
கசப்புக்கிடமேயில்லை
பாவற்காய் இனிக்கிறது.

இனிப்பேசலாம்
எனக்கு ஆயிரமாயிரம் சொற்கள்
நாக்கில் ஓடுகின்றன
உமிழ் நீர் சுரந்து
கடைவாயால்
வீணீர் வழிகிறது
அவ்வளவுதான்.

கொலம்பஸ்
நாக்கைப்பிடித்தான்
வசம்பை திறாவினான்
நான் சிறுத்துக்கொண்டே
போகின்றேன்
நாக்கும் சிறுக்கத்தொடங்கியது.

23.09.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருங்காற்றில் சிறகுடைந்துபோன பறவை நான்

கவலையுற்றே காலம் கடந்துவிட்டன.
இன்னும்மீதியிருக்கும் வாழ்வில்
எதைத்தான் காண்பேன்.

வெறுமையில் உணர்ச்சியேற்றி...
எலும்புகளுக்கு துடிப்பேற்றி......
காலம்கடத்தும்
உங்கள் வார்த்தைகளுக்கு
பொசிங்கிப்போன
என் அண்ணன்
சித்தப்பன்
மாமா
மச்சான்
நண்பன்...
நீளுகின்ற பட்டியலில்
நீங்கள் வெள்ளைவேட்டியிலும்
வெள்ளைச்சட்டையிலும்
மலட்டுநிலத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

என் பாதுகாப்பற்ற பூமியில்
அடைகாத்துக்கொண்டிருக்கும்
என் குஞ்சுகளை
பருந்திடம் மீள.. மீள..
காவுகொடுக்கவா
சொல்கிறீர்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தின் எல்லையில்
உதிர்ந்துபோன உன்னிகளைப்போல்
எனக்குள் என் கொடுமைகள் உதிரட்டும்.

காலாவதியாகிப்போய்க்கொண்டிருக்கும்
என்காலத்தின் முன்
என்னைப்புதைத்தாலும்
துண்டு துண்டாக வெட்டினாலும்
எரித்தாலும்
என்னிடத்தில் எதுவுமில்லை.

பெரும்காற்றில் சிறகுடைந்துபோன பறவை நான்.

காற்றுக்கு நெஞ்சை நிமிர்த்திய காலங்களில்
காற்றோடு பறந்திருந்தால்...

இன்று
நீள நினைந்து கவலையுறுகின்றேன்.

காற்றே என் குஞ்சுகளை
உன் திசையோடு பறக்கவிடு...
மீண்டுமொருதரம்
எனக்குச் சிறகு எதற்கு?

15.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியாகச் சொல்லப்பட்டவார்த்தை
## குறிப்பு-1

அரிச்சந்திரனுடனான
எல்லாத்தொடர்புகளும்
அறுந்துபோய்
52 வருடங்கள் கடந்துவிட்டன.

அவன் பற்றிய எதுவும்
என் நினைவிலில்லை.

நேற்றிலிருந்து
என்கனவில்
முளைக்கத்தொடங்கிவிட்டான்.

கச்சக்கட்டுடன்
காவல்காக்குமவனை
யாரும் உசுப்பமுடியாது.

பொய்களை விழுங்கிக்கொண்டு
அவன் எழுந்துகொண்டிருந்தான்.
கால்களில் மயிர்கள்
நெட்டி நிற்க
புணங்களின் நாற்றத்தை
நாசியினுள் உள்ளிழுத்து...
மெய்களைத் துப்பிக்கொண்டிருந்தான்.

அவனைப்புரிவதற்கே
என்னில் ஞானமுமில்லை.
பேசுவதற்கு என்னில் வார்த்தையுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தருணம்,
'பி.எச்.ஜ'
எங்கிருந்து வந்தானோ தெரியவில்லை.
முகக்கவசம் அணியவில்லையென"
தண்டனைக்கோவையைத் திறந்தான்

"10000 ரூபா"

"ஒரு வயிற்றுச்சோற்றுக்கே வழியில்லை -
நோட்டுக்கு எங்கே போவேன்"?

'பி.எச்.ஜ' உறுமினான்
பொலிஸ்காரன் கைதுசெய்தான்.

ஒரு பொய் சொல்லென..
நான் மண்டாடியும்
அவன் காதினுள்
ஆணியை அறைந்திருந்தான்.
ஆணியைப்பிடிங்கியபோது
உடல்முழுதும் தெம்பேறியது.

என் மகளிடம் சொல்லென்றான்

"லோகிதாசனா?"

"இல்ல....இல்ல..குயிலி..
என்ட பெட்டக்குட்டி"

"குயிலியா?"
இது எப்போ"?
"சந்திரமதியிடம் கேள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள் நான்காம் மாடியிலுள்ளாள்"

உடல் முழுதும் உறைந்து
கால்கள் துவள..
குளிர்தாவா அறையினுள்
நான் தலைகீழாகப்பயணிக்கின்றேன்.

"நான் வெளியில்.."

மசுக்குட்டிபோல்
ஒரு குறிப்பொன்று
...... துடித்தது.

"அரிச்சந்திரனின் மகளே"
"உண்மை சொல்"

என் சொற்கள்
அவள் கட்டிலில்
அவள் கணினியில்
அவள் மேசையில்
அவள் சுவரென...
......
............
அறை முழுதும்
முளைத்தன.

இறுதியாக.......

08.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியாகச் சொல்லப்பட்டவார்த்தை
## குறிப்பு - 2

எல்லாவற்றையும் இழந்தபின்....
வண்ணாத்திப்பூச்சி
பறக்கத்துடித்தது.

கால்கள் ஒருவனிடமும்
இறக்கை இன்னொருவனிடமும்
கண்கள் வேறு ஒருவனிடமும்...

பறிகொடுத்த வண்ணாத்தி....
சுடுமணலில்
வெயிலைப்போர்த்திக்கொண்டது.

o

மாதத்தின் விடாய்
அவளை வாட்ட
அடிவயிற்றைக் கையால் பொத்தி
கண்ணால் பேசினாள்.

நான்,
கச்சைக்கட்டைத் தொலைத்த
அரிச்சந்திரனைச்சொன்னேன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள் பட...படவென அடிக்க
மூச்சுக்காற்று சூடேற்றியது
வக்கற்ற முகத்தை அணிந்துகொண்டவள்
அரச ஊழியர்களை...
காறினாள்.

உடல் முழுதும் வாசனையை
அள்ளிப் புனுகியவள்
கட்டிலில் தொப்பென விழுந்து,
எட்டுக்கால் பூச்சிகளின் தந்திரங்களைக்
கற்றுக்கொண்டாள்.

வாள்கள்
கத்திகள்
துப்பாக்கிகள்
எதுவும் அவளுக்குப் பிடிபடவில்லை.
துருவ நட்சத்திர ஒளியில் நடக்கலானாள்.

கோபத்தின் அனல்கள்
காங்கைகளைக் கக்க
உதிர்ந்துவிழுகின்ற
வெள்ளிக்குஞ்சுகள்
தொம்பலுக்குள் மறைந்தன.
அப்போ,
அவள் உடலில்
ஆயிரம் கண்டுபிடிப்புக்கள் முளைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டென,
உணர்ந்தவளாய்
யோனி வெடித்து
தொடையால் பீறிட்டுப்போகும்
துவாலையை...
கைகளினால் பொத்திப்பிடித்து
என் நிலங்களைப் பிடுங்கும்
சாத்தான்களின்
கழுத்துக்களறுந்து போகட்டும்.

சாபங்கள்
எதிரொலிக்க...
அடர்த்தியான இரவின் விச ஜந்துக்கள்
கொட்டாவி விட்டன.

நாங்கள் நடந்துகொண்டிருந்தோம்
குயிலியின் குடும்பியில்
முளைத்தெழும்பின..
கொம்புகள்.

என் ஈரக்குலை நடுங்க...
அவள் பின்,
அடிமேல் அடியெடுத்து
நடக்கலானேன்.
பனி கொட்டி உறைந்துபோன தெருவில்
புகை கக்கின.

09.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறுதியாகச் சொல்லப்பட்டவார்த்தை
## குறிப்பு-3

வேட்கையின் குரலொன்று
என் தலைசீவிப்போக
அவளைத்தேடினேன்.
காற்றில் உறைந்துபோன
அவள் முகம்
எங்கும் சூட்சுமம்மாகின.

அருவுருவத்தின்
சலசலப்புக்கள்
அலையடித்து அதிர...
என் ஆண்குறி சுருங்கி
உயிரிழந்த விந்தினை கொட்டிச்சிந்தியது.

அனல் பறக்கும் காற்றில்
விஷம் நிறைந்திருக்க,.
எட்டுக்கால் பூச்சிகள் என்னுள் ஊர்ந்து
வலைபின்னும் இதயப்பரப்பில்
அவள் நாமம் ஊர்ந்து கொண்டிருக்கின்றது.

அரிச்சந்திரனுக்கும்
எனக்கும்
அவளுக்கும்
என்ன உறவு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குப்பின்னால் நடந்த
என்பாதங்களில்
முளைத்திருக்கும் கொப்பளங்களா -
என் உறவின் சாட்சியம்?

இன்னும் இன்னும் அனல் கக்குகின்றது காற்று.
............
அவள் நாமத்தின் மீது
எட்டுக்கால் பூச்சிகள்
வலை பின்னிக்கொண்டே இருக்கின்றன.

மீட்கமுடியாத அவள் உருவினைத்தேடி
காற்றில் பறக்கின்றேன்.

சிக்குண்டுகிடக்கும் முட்கம்பிகளுக்குள்
ஒரு வண்ணாத்திப்பூச்சியாய்
மொய்த்திருந்தாள்
என் மனதில் விரிந்துகிடக்கும்
அவளை உசுப்பினேன்.
மீட்கமுடியாத அவள் உருவில்..
"ம்..ம்ம்ம்ம்....ம்...வார்த்தையை
உள்ளங்கையில் பொத்தி
பறக்கலாளானேன்.

அப்போ,
அவள்மறைந்து
என் இதயத்தில்
வேர்விடத்தொடங்கினாள்.

11.12.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செட்டைகழட்டிய நாகம்

நாகம் மீண்டும்
செட்டை கழட்டியிருப்பதைப்பார்த்து
அவன் திகைத்தான்.

சிவனின்
கழுத்தே தஞ்சமென கிடந்த சர்ப்பம்
கசந்துபோன விடத்துடன்
கீழ் இறங்கி வந்திருப்பது அவனை மருட்டியது.

கதவுகளின் ஓரங்களில் அவனின் மென்
ரேகைகள் தடாவிய தடங்கள்
மேட்டு நிலங்களில் குளிர்காய்ந்த நாகம்
மென்மையின் அர்த்தங்கள் புரியாது
விடத்தை கக்கியே காலத்தை ஓட்டியது.

காலம் துறந்தவெளியில்
எல்லாம் இழந்துபோன கார் காலம்.
மீண்டும் வேனில் காலமென நாகம் சொல்ல
அவன் கச்சையை மட்டும் அணிந்திருந்தான்
புதுப்பிக்கமுடியாத தேகத்தை அவன்
நாகத்திடம் எப்போதே ஒப்படைத்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து , தூர்ந்துபோன காலக்குறியில்
கச்சையை மறந்து
குறியிழந்து......
..........
செட்டை கழட்டிய நாகத்தின் பத்தியில்
உறங்கிப்போனான்.

அப்போதுதான்
கி.மு 6ம் நூற்றாண்டின்
கோதையைக்கண்டான்.

22.09.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலாறிக்கிடந்த நிலம்

நான் இப்போ காடடைந்துகிடக்கும்
என்நிலத்தினைக் கொத்துகின்றேன்.

நட்சத்திரவொளியிலும்
நிலவின் அணைப்பிலும்
காலாறிக்கிடந்த நிலம்
நேற்றிருந்து கால்வேறு
கழுத்துவேறாய்க்கிடக்கிறது.

ஒவ்வொரு கொத்தும் முனகலுடன் மீளும்
மண்வெட்டி
தாய் நிலத்தின் அடக்கத்தை
கிழித்தெறிந்து கொட்டாவி விட்டது.

ஒவ்வொரு அங்குலம்அங்குலமாய்
இலுப்பைப் புல்லின் மடிக்குள்
மறைந்திருக்கும் முட்டிக்கிழங்கு
கிசுகிசுத்துச் சினுங்கியும்
கோரைப்பல்லன்
ம்..ம்..என மண் புதைக்குள் புகுந்தான்.

நான் கீழ் இறங்கி வரம்பில்
கால் ஊன்றி
பால்வெளியைப்பார்க்கின்றேன்.
செட்டை கழட்டிய பாம்புகள் பறந்துபோகின்றன.

20.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதுகுடைந்த வானம்

வானம் கீழ் இறங்கி
முற்றத்திலிருப்பதை
நான் காணவில்லை.
காற்றில் மணத்துவந்த செய்தி
என் கையும் காலையும் உதறவைத்தன.

பத்தாயிரம் கோடிவருசமாக
அம்மணமாக இருந்த வானத்திற்கு
திடீரென என்ன நடந்தது?
என்னுடைய மண்டையைப் பிய்த்தெறிந்தேன்.
என் பூமியின் தடுப்புச்சுவர்
ஏன் கீழ் இறங்கியது?

நச்சுக்கனியை புசுக்கும்போதும்
அது கீழ் இறங்கவில்லையே
ஏன் இப்போ?

இப்படிக் ...கோணல் மாணலாக
மூளை ஓடித் திரிந்தும்
ஒரு சிறு துகள் துப்பும் கிடைக்கவில்லை.

இரவின் தீச்சுடர்களைத் தாங்கி
(ஒளிர் வாளை ஏந்தி...)
வெண்மேகங்களை மேயவிடும்
வானமே!
மாதவிடாய் உனக்கு வந்ததில்லையே
அப்போ ஏன் கீழ் இறங்கினாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு குதிரையில் உலாவும்
கதிரவனோடு" கசமுசாவா"?

விரிகையின் எல்லைகள்.. அகழித்த பால்வெளி
முழுதும்
கோடி ...கோடி..கோடி..கண்கள் முளைத்து
உதிர்கின்ற ரத்தத்துளிகள்
வானத்தின் முதுகில் சொரியும் கணம்
நான் கண்டேன் வானத்தை.

பல வருடங்களாய்- நான் மறைவாய்ப்பார்த்த
வானம்
என்னைக்கண்டு முலையையும், யோனியையும்
மறைத்தது.
பேச எத்தனித்துத் தோற்றுப்போன அதன்
வார்த்தைகள்
அடித்தொண்டையில் செத்துப்போயிற்று.

கூட்டங்கள் கலைந்து போயிற்று
வானம் அழத்தொடங்கியது
பேரண்டம் முழுதும் அதிர்ந்தது.
அப்போதும் வானம் என்னை நேருக்கு நேர்
பார்க்கவில்லை.
"எடுத்துக்கோ" ஓர் அமானுசக்குரல் மாத்திரம்
என் காதினுள் ஊர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை
ஔவை வந்தாள்
அவள் கூன் அகழவுமில்லை,
அவள் மாறவுமில்லை.
வாருகோல்
கட்டால் அடித்தாள்
வானம் ......கதறியது...

*

என் முற்றத்து வானம் பற்றிச் சொன்னால்
நீங்கள் யாரும் நம்ப மாட்டீர்கள்.
அது பறந்து பறந்து போய்க்கொண்டிருக்கிறது.
மீண்டும் எப்போ விழும் என யாருக்கும் தெரியாது.

இப்போ இந்த வானம் நிறம்மாறிப்போயிற்று.
நீலவானத்தையும் வெள்ளிக் குஞ்சுகளையும்...
பேரண்டத்தில் இனி நாம் காணோம்.

19.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுடாதே

இலக்கங்களை ஒட்டிக்கொண்டு
சிவனைப்போல்
மண்டையோட்டைத் தாங்கிக்கொண்டு
ஓட்டப்பந்தையத்திற்கு களமிறங்கியிருக்கும்
வீரர்களைப்பார்த்து
என்கையிலுள்ள துப்பாக்கியை
வானத்தை நோக்கி சுடாமல்
என் சுட்டிவிரலை
துரோணருக்குத் தானமாகக்கொடுக்களாமென
என் மனம்
மயிர் உதிர்ந்த மசிக்குட்டியைப்போல்
மாறியது.

ஆயத்தம்
ஆரம்பம்
டுமீர்
இக்கட்டான சூழலில்
நான் ஆரம்பித்ததை வீரர்கள் ஆட்சேபித்தார்கள்.
ஒப்பில்லை என்றார்கள்.
நான்"X" சப்போட் டர் என்றார்கள்.
கதவடைப்பு ப்பற்றி நான் அவர்களுக்கு
வகுப்பெடுத்தேன்.
உடல் தகுதியின்மை பற்றிப் படிப்பித்தேன்.
தங்கள் தங்கள் திறனையும்,தகைமைகளையும்
ஒப்பித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிகொடுக்கப்பட்ட எலும்பினையும்
ஆரோக்கியமற்ற உடல் வாகினையும்
பாதணி களை அணியத்தெரியாத நுட்பத்தையும்
அடிக்கினேன்.
புதியவர்கள்
பழையவர்கள்
ஏக்கத்துடன் என்னைப்பார்த்து' புரட்டஸ்'
செய்தார்கள்.

நண்பர்களே! நானும் ஓர்காலத்தில் ஓட்டக்காரன்
காடு, கரம்பையெல்லாம் பயிற்சியெடுத்தவன்.

அச்சம்பற்றி நான் கிஞ்சித்தும்
நான் கிலி கொள்ளாதவன்.

வாழ்வு எல்லாவற்றையும் மறைத்துக்கொள்ளும்
இன்னும் மிச்சமிருக்கும் காலத்தில்
உன்னைத் தயாராக்கு
உடலை வலுவாக்கு
எலும்புகளை களவுகொடுக்காதே
பாதணியை அணியக்கற்றுக்கொள்.
நீ உண்மையான ஓட்டவீரனாக மைதானத்திற்கு
வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி நிட்சயம்.
சுடாதே
சுடாதே
டுமீர்
டுமீர்

புழுதி பறந்து
மைதானம் கறுப்பாயிற்று.
யார் வெற்றி பெற்றார்
நடுவர்கள் முழுசினார்கள்
நான்தான்
நான்தான்
இரத்தக்கறை மைதானத்தை நனைத்தது
போட்டி ஒப்பில்லை ஒப்பில்லை
யாரும் வீரர்கள்ளில்லை
ஒலிபெருக்கியில் அறிவித்தார்
...............

10.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாம்பல் நிறக்கனவு

சாம்பல் நிறக்கனவில் மூழ்கின்ற உரு
என்னை அடித்தெழுப்பிவிட்டது.
நடுங்குகின்ற உடல்
அவநம்பிக்கையான வாழ்வின் மீதான
கேள்விகளை உதிர்த்தி
கால் உதறல் நிலத்தில் படரவிடாமல்
பாதங்கள்
இக்கெட்டான கணத்தின்
சொல்லமுடியாத துயரில்
செத்துக்கொண்டிருக்கின்றன.

வாழ்வின் பேரோசை
என்னத்தைத்தந்தன?

காலநீட்சியில்
கழிந்த சுமைகள்
மாயத்தின் எத்தருணத்திலும்
அடைவுகளை மனம் வெற்றிகொண்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் நினைக்கின்ற
வேட்கையின் சூட்சுமத்தில்
உயிராசையைக் கையில்பிடித்துக்கொண்டு
மாயத்திரையை அணிந்த பயணிப்பு
எதை..........?

என் தூங்கா விழிகள்
சாம்பல் நிறக்கனவினூள்
வீழ்ந்து.....வீழ்ந்து...
மரணத்தின் மீளா அழைப்பு
என்னைக்கொன்று கொண்டிருக்கிறது.

இனி,
என்னைக் குடைகின்ற
விடியற்காலை 3.50
இனியொரு போதும் உதித்துவிடாது.

சாம்பல்நிறக் கனவே
என்னைக்காத்திடு!

09.06.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடி

விசர் பிடித்திருக்கின்ற
என் மண்டைக்குள்
வாழ்வின் கொடிய நெடி..
நாசியின் கதவின் இடுக்கினுள்ளால் கடக்கிறது.

ஒவ்வொரு கணமும்
ஏமாந்து போகும் நிமிடங்களில்
ஏதேதோ விரிகைகள்
ஆசுவாசப்படுத்தினாலும்
நிலத்தில் ஊன்ற முடியாது
சவுத்துப்போன கால்கள்
தொலைந்துபோன தடங்களை மீட்டித்
தள்ளாடுகிறது.

உயிரின் பற்றுக்கோடு எப்பவோ செத்துப்போயும்
உடல் ஊசலாட்டம்தான்
அறுந்து தொங்கிப்பறக்கும் பட்டம்போல்
பறக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்வேன்?
தெருவில் அலைந்து திரிந்து
காகத்தோடு கூடக் கதைபேசமுடியாத
விரிகையின் நெரிஞ்சியில்...
காக்காச்சி
மூக்காச்சி
கறுத்தப்பொண்டாட்டி
..............
காதினுள் பறைகின்ற ஓசை

காகிதத்தை மறந்துபோன தபால்காரனின்
அரண்களைப்பார்த்து
எட்டத்தில் நின்று
ரம்ஸ் எனக்கு அனுப்பிவைத்த
நோய்ப்பிணினியினைக்கேட்டேன்.
(பாகம் -2, சோ.பி.)

28.03.2020

## புது இரத்தம்

நான் கண் விழித்தேன்.
உடம்பு அடித்துப்போட்டதுபோல் இருந்தது.
வலக் கண் சிக்கி நெரு ..நெருவென்றிருந்தது.
ஒரு வருடத்திற்குப் பின்னரான.
மஞ்சத்து ஒளிவீசும் பயணமாக இருக்கவேண்டும்
பச்சையை அப்பிச்சூடியிருந்த கானகம்
முழுவதுமா ஏறி இறங்கினேன்?
ஒளி பாச்சும் வெள்ளத்தில்
புது இரத்தம் ஊறியெழ.
மீண்டும் அறைக்கு வந்தேன்.
காற்றுக்கூட புது நடப்புக்காட்டியது.
நினைப்பை வெளியில் எடுத்து தூக்கிப்போட்டேன்.
ஒட்டிக்குஞ்சுபோல் துடித்தது.
எத்தனை நாட்கள்தான் இப்படித்துடித்ததை
வெறுத்துப்பார்த்திருக்கிறேன்.
இன்னொரு இரவு எப்போது கண் விழிக்குமோ
தெரியாது?
அந்த நாள் ஓரா ஒட்டியாக வளரவிடாமல்
ஒட்டிக்குஞ்சுகளை அரிவாள் மனையில் ..
அப்போ மழை பெய்யட்டும்.
பாட்டம் பாட்டமாக பெய்யட்டும்...

20.04.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெறிச்சோடிக்கிடக்கும் தெருவில்**
**தனித்து நடக்கின்றேன்**

........

....................

மூக்கைமூடிய மூஞ்சூறு வண்டுகள்
ஒன்றோ இரண்டோ தெரியவில்லை
ரீங்காரமிட்டுப்பறக்கின்றன.

எங்குதான் போவேன்?
அறைக்குள் அடைபட்டு
எவ்வளவு நேரம்தான் உழற்றுவது?
எதிலும் பிடிப்பற்று
உறங்குகின்ற மனம்
முற்றத்தில் இறங்கிவந்திருக்கும்
வானத்தைக்கூட
அணைத்தெடுக்கக்கூட
மனசிவரவில்லை.
o

சூனியத்தின் கால நீட்சியில்
அழிந்து போகும் வாழ்வு
எதிலும் பற்றற்று
நேற்று கத்திப்பறந்து,
ஊரையே கதிகலக்கிய கூகையின்
ஓசை இன்னும் என் காதினுள்
அறுந்தெழுகின்றது.

என்னதான் செய்வேன்?

பிரளயத்தின் ஊழியில்
நான்.....??? எதைத்தான் செய்வேன்.?

18.03.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈனப்பிறப்பின் பெருங்காற்று

உரசப்பட்ட கல்லொன்றின்
ரணச்சொட்டு
பச்ச இரத்தத்தையே ஊற்றுகிறது
போதைநிரம்பியிருக்கும் மனம்
எப்போதுதான்
சுயநிலைகொள்ளுமென..
காற்றுக்கு கால்முளைக்காமல்
வானம் இடிந்தது

காடுகளை மினுமினுக்கவைக்கும்
மின்மினி கூட
கையைவிரித்துப்பறந்துதான்
பொயிற்று.

ஈனப்பிறவியாய்
பிறந்த வாழ்வின்
கொடுமுடியை
துறக்கத்தான் என்னுகிறேன்.

மனம் பயம் கொள்கிறது
தினம்தினம் அறைந்து
என்னைக்கொள்கின்றவார்த்தைகள்
இதயத்தைத்தீய்த்து
சுடு கொம்பளமாய்
விரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ, சொப்பனத்தில்
சோதிப்பிளம்பைக்கண்டு
என் கைபேசிக்கு
தொல்லைகொடுத்தாய்
மறுநாள் மயக்கம் தெளிந்ததாய்
காற்புள்ளியைக்கொழுவி நின்றாய்

நான் அருவத்தை வெறுத்து
பல ஆண்டுகள் கடந்துபோன
பின் இரவில்
உன் கூத்தை அரங்கேற்றினாய்
யாரும் என்னை நம்பார்
நீ, தீயில்மிதித்து
மிதிலை மீண்டவள்
என்னை எப்படி நம்புவார்கள்?

சோதியில் கலக்கத்தயாரான
கணம் ஒன்றில்
நான் தகுதியற்றவன் என்றாய்
கழுத்திற்கு கத்திபாய்ந்தபின்
நான் ஏது செய்வேன்?

சிவனே மூலமென்றாய்
நெற்றிக்கண் உண்டென்றாய்
பிதட்டாதே என்றேன்
காது ,மூக்கு ,வாய் வைத்து
நான் ஓர்மமற்றவனென்று
ஈனப்பட்டம் வழங்கினாய்
மணிக்கணக்காய் அவளிடம்
பொய்மூட்டைகளை அடுக்கினாய்
என்மீதுமட்டும்
அவதூறுகளை விதைத்தாய்
புதிதாய் "சம்மந்தரை"
கொன்றதாய் கதைவிடுகிறாய்
நான் என்ன செய்வேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவேற்றிப் பல தலைகளைக்கொய்ய
அனலையும் புனலையும்
கையில்வைத்து
அவன்தான் வேட்டையாடினான்.

நீ இப்போ ஒற்றைமுலையுடன்
அவளிடம் சொல்வதாக மிரண்டுகின்ற உன்
பசப்பல்
துடிதுடித்து சாகின்ற
மஞ்சள் பொழுதில்
காக்காய் குஞ்சின் வாழ்வின்
திமிர் அலைகள்
ஒழிந்துபோன கஷணங்களில்...
வெற்றிகொண்டதாய்
செய்தி ஒன்றை அனுப்பினேன்

பின்,
சோதியை அணைத்து
சுரி நாற்றங்கள்
அகன்றுபோக..
என்மீது விட்டேவிய பில்லியை
விழுங்கிக்கொண்டு
எல்லா இடுகைகளையும்
அழித்து
அமவாசை இரவுகளைப்புரிகின்றேன்.

01.02.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடையளிக்கமுடியாத புத்தன்

எல்லாக்கேள்விகளுக்கும்
விடையளிக்கமுடியாத புத்தன்
விருட்சத்திற்கும்
மணல் பெருக்கத்திற்குமிடையே
நின்றுகொண்டு
நம்பிக்கையின்பொருளை வினாவினான்

ஆயிரம்மாயிரம் வருடங்களாக
ஒழிந்தும் அழிந்தும்
தீட்சனமற்ற
மாயத்தின் மர்மத்தை
என்மீது சுழற்றி..
பரிநிர்வாணம் தோற்றுப்போனது.

அப்போது இரவுபத்துமணி
அவனோடு உரையாடமுடியவில்லை
நிர்வாணப்போதனைகள்
குளிரப்பன்னிய நாட்களில்
சுக்கிலம் பெருக்கெடுத்தது
நீர்க்குடம் உடைந்தது.

சாமத்துப்பனிக்கூதலில்
நம்பிக்கையின் மறுதலிப்பென்று..
அவன் ஞானதிருட்சியை
மெய்யென்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றையும் தீர்மானி க்கும்
மாயவலையைப்போர்த்தி
கடவுளின் வாக்கு மூலம் என்கிறான்.

கடவுளின் செயலால்
காவிகளற்ற துறவரத்தில்
புத்தன் மீண்டும் மீண்டும்
நம்பிக்கையின் பொருளை
எதிரொளிக்கத்தொடகினான்
ஒழித்தும் மறைத்தும்
வைக்கமுடியாத சொற்கள்
புத்தனை துவம்சம்செய்ததாக
பொய்மைகள் கட்டப்பட்டன

அவன் நாமத்தினால்
ஏக்கம் கொண்ட சயனம்
ஆயிரம் கதைகளைக் கட்டவிழ்த்தது

எல்லாவற்றையும் மறைத்தும்
புதைத்தும்
யசோதாவே சரணமென
புத்தன் கனாக்காணத்தொடங்கியபோது
காணாமல்போன இச்சைகளை
பொட்டுப்பூச்சியாய்
ஒட்டறைகளை நூர்கத்தொடங்கினான்.

முன்னரும் அவனுடைய கனவுகள்தான்
நட்சத்திரமற்ற பொன்வானில்
பறக்கவிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தன்னைப் பட்டமென்று
உணரத்தொடங்கிய அமானுச
கணங்களில்
இரும்புப்பொல்லை ஒளித்துக்கொண்டு
வேறு வேறு காதைகளைப்
பாடத்தொடங்கினான்

உண்மையில் நம்பிக்கை என்பது என்ன?
வெடித்துச்சிதறிய சதைத்துண்டுகளை
வேங்கையின் வெஞ்சினப்பசி
அடக்கி முகிழ்க்க
புத்தன் கண்ணீரை உதித்து
மறு கன்னத்தை நீட்டினான்
........
..................

எல்லாவற்றிலும் நம்பிக்கையுள்ளது
நம்பிக்கையினமுமுள்ளது
எங்கும் நறுமணமுமுள்ளது
எங்கும் நாற்றமுமுள்ளது

புத்தரின் பெயரால்
அவனும் போதிக்கலானான்.

ம் ..ம்...ம்..
இந்தப் பாவத்திலிருந்து தப்பிப்பவன்
எவனுமில்லை
தூர்ந்து போன மூத்திரக்குழாய்
அமிர்தத்தைக்கொட்டத்தொடங்கியது.

01.01.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயூட்டனின் மூன்றாம் விதி

நீண்ட நாட்களாய்த்தேடி
அகப்படாத நீயூட்டன்
அதே அப்பிள் மரத்தின் கீழ்
உறங்கலானான்

வருடக்கணக்காய் எனக்குள்
அறுத்துக்கொண்டிருக்கும்
E சமன்MC வர்க்கம் பற்றி
அவனிடம்...
கணைகளைத்தொடுத்தேன்
ஐயன்சன்னுடன்
எந்தத்தொடர்புமில்லை
நிறங்களற்ற கைகளை விரித்தான்.

மரங்களையும் வானத்தையும்
மலங்க மலங்க முழிக்கும்
நியூட்டன்
தாக்கத்தையும் மறுதாக்கத்தையும் வெறுத்து
எனக்கும் ஆயிரம் கேள்விகள்
இருக்கின்றன
நான் என்ன செய்ய...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனைகளைச்சூடுகின்ற
கண்டுபிடிப்புக்களை
அவன் வெறுக்கத்தொடங்கிய
பல நாழிகைகளில்
அதே அப்பிள் விழுந்தது

தூ.....

ஆனால் ஐயன்சன் புறக்கியெடுத்து
ஈர்ப்புவிதியென்றான்.

ஜன்னலுக்கு அப்பால் நிற்கும் சூரியன்
அறுந்து விழுந்து கரணமடித்தது.

அக்கணம் பூமி
23. 5 பாகையின் சாய்வில் இருப்பதை
நான் நம்பவில்லை
ஆமேன்.

05.05.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுடைய பழையகவிதை

என்னுடைய பழையகவிதையொன்றைத்
தூசிதட்டிப்படிக்கத்தொடங்குகிறேன்
நேரம் பி.ப 10.50
(10 மணிக்குப்பின்தான் சுயரூபம் வெளிப்படும்)

காற்றில் கரைந்துபோகின்ற
குரலினை
கையகப்படுத்தமுடியவில்லை

நீ இன்னும்
தொடங்கிய இடத்திலே
உறங்குகிறாய்...
எழுத்துக்கள் மிகுதியைத்தின்றுவிட்டன.

ஏய்! நான் எல்லாவற்றையும்
துறந்து நிற்கிறேன்.
இன்னுமொரு அதிசயம் என்னுள்
நிகழாதிருக்கவேண்டும்

எப்போதைப்போலும்
நாறுகின்ற உன்னிச்செடி
எந்தத்துர்மணத்தையும் பரப்பாது
என்னை அமர்த்திவைத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முடிவுக்கு வரவிரும்புகின்றேன்
ஏங்கிசலை
இன்னும் தலைமாட்டுக்குள்
வைத்துக்கொண்டு பேய்களை விரட்டலாமென
கனவு கண்டதை துறக்கின்றேன்.

ஆனால் மீண்டும் ஒரு 10 மணி
இருள்கொள்ளக்கூடாது

பக்கிள் கத்தும் நடுநிசிகளில்
பாக்கு வெட்டியையும்
ஏங்கிசலையும்...
தலைமாட்டுக்குள் இருந்து
கடலினை முழந்தாலிட்டு
ஒப்புக்கொடுத்தேன்.

கடல் கர்ப்பிணியான
ஒரு ஞாயிறு
வாந்தியெடுக்கத்தொடங்கியது

தூசிகள் பறக்கத்தொடங்கின
மஞ்சள் கடதாசியில்
கால் பெருவிரலினை ஊன்றி..
எல்லாம் சர்வமயம்.

கவிதை நீளத்தொடங்கியது
கடலுக்கும் கவிதைக்கும்
மூப்பெய்திற்று

02.08.2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனதின் பாடல்**

கொலை வெறிபிடித்தலைகின்றது
எனது மனம்
நீண்டநாளாய்
மனச்சாட்சியைப்
பொத்திப்பொத்தி வளர்த்து
எதுவுமடையா என்மனம்
தீச்சுடர் ஏந்திற்று நேற்று.

நான் மனச்சாட்சி
மதியிழந்துபோன
மாயக்கண்ணாடி
இனி நான் எரிப்பேன்.

**2**

முட்டாள்தனமான பேச்சுக்கும்
முட்டாள்தனமான செயலுக்கும்
எப்படி உடந்தையானாய்-
மனச்சாட்சியே?
இன்று எரிப்பான்
நாளைபுதிப்பிப்பான்
நாளை மறு நாள் சடலமாவான்
நீ.....?

**செயல் 1**

சூனியம் வெல்லும் உதிர்காலத்தில்
முன்பனியை யள்ளிவீசி
மறைந்திட்ட மனம்
மீண்டும் துயில் கலைகிறது,
பெரும் சோம்பலுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயலாமை 1

ஓலம்...ஓலம்
எங்கும் ஓலம்

கர்த்தா காத்திடுவாயா?
சுட்டெரிக்கும் சூரியனை
நதிப்படுக்கையில் வீழ்த்திடுவாயா?

ஓலம்..ஓலம்
எங்கும் ஓலம்..
கர்த்தரே
உன் சிலுவைப்பாடுகளை
நாம் ஏந்துகின்றோம்

## 3

எப்படியும் மனமே!
நீ காத்துத்தான்
ஆகவேண்டும்
உன் இருப்பும்
உன் சுயமும்
கத்தியில் தொங்குகின்ற கணங்களை....

காத்துத்தான் ஆகவேண்டும்
உயிர் ஊசலாடுகிறது
நான் ஏது செய்வேன்?
மண்டை பிழந்து
மாண்டுபோவேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செயல் 2

சுடு
சுடு

நீ அதுபற்றிச்சிந்திப்பதற்கு
எந்த யோக்கியமுமில்லை

நான் சொல்கிறேன்
நீ செய்..

சுடு
சுடு
சுடு

### இயலாமை 2

சிவப்பேறுகின்ற நதிப்படுக்கை
நாற்றம்...

கழுகுகள்
வட்டமிட்டு
புசிக்கின்ற கபாலங்கள்
ஊரைக்கூட்டுகின்றது.

ஓயாத ஓலம்
நிலம் முழுதும் அலற

பேய்கள்..
பேய்கள்..
எங்கும் பேய்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4**

நான் குற்றமற்றவன்
இருபது வருடங்கள்
மனச்சாட்சியோடு வாழ்ந்து
தோற்றுப்போனவன்
எல்லாக்கதவுகளும்
மூடப்பட்டுள்ளன
இன்னும் ஏன் பேசுகிறீகள்?

நாங்கள் நாய்கள் கூடயில்லை
நாங்கள் ஒரு பூச்சி கூடயில்லை
தோலும் சதையும் எலும்பும்
இரத்தமாகவுமில்லை
ஏன் இன்னும் கதைக்கிறீர்கள்?

ஒளியிழக்கின்றது பொழுது
நான் சொல்வதற்கொன்றுமில்லை
எல்லாம் முடிந்துதான் பொயிற்று

பந்தை ....
பாதி பாதியாய் வெட்டிப்
போட்டுவிட்டீர்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எந்தப்பாதியில் வாழ?
எதில் வாழ்வேன்?

சூனியத்தின் நடுவில்
நான்
நக்குவாரப்பட்டு
வாழ்ந்துதான்
என்ன செய்வேன்?

ஆண்செடி நாறுது
பெண்செடி நாறுது
ஐயனார் கோவிலுக்குள் யாரடா?

நான்தான்
நானேதான்
சுடாதே...
என்னைச் சுடாதே...

08.09.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைபடும் உரு

பனி கொட்டும் வெள்ளாப்பு
சுவாமி விவேகானந்தர்
அடிபட்டபோது
நான் திடுக்கிட்டு எழுந்தேன்
மிகத்துக்கம் என்னில் கவ்வ
உடைபட்டு நிற்கிறார் சுவாமி.

பாவம் சுவாமி
சிக்காக்கோவில்
யாரும் கைவைத்திருந்தால்கூட
மனமாறியிருக்கும்

150 வருடங்கள் கடந்துபோன பின்பும்
இன்னும் மதத்தின் பெயரால்
சுவாமி உடைபடுகின்றார்.

கயவர்கள் தூங்குவதில்லை
இனங்களுக்கிடையே
மரணத்தை பரிசளிக்க
முயல்கிறார்கள்.

மரணம் அவிழ்க்கப்பட்ட நிலத்தில்
தனித்தனியாக கழன்று குழுங்க
எந்தச் சலனமற்றும்
நான் எல்லைவீதியால் நடக்கின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர..சகோதரிகளே!
எனக்குள் சுவாமி எழுகிறார்

நான் குடுவைக்குள்
உடைக்கப்பட்ட மூக்கை அடைத்து
வாவியில் எறிந்துவிடுகிறேன்
பேரலையெழுந்து
மேற்குப்பக்கமாய்
பேரிரைச்சலாய்போகிறது.

நடந்து கொண்டிருக்கிறேன்
பகல்சாய்ந்துகொண்டிருக்கிறது
பாவம் ஒருகிராமம்.

13.10.2012

*(ஆரையம்பதி காத்தான்குடி எல்லையில் சுவாமி விவேகானந்தரின் சிலை உடைப்பு நாள்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவதையின் முத்தம்

காலற்றுப்பறந்து
அவனை உசுப்புகின்ற தேவதை
நீண்ட காலக் கனவுக்குவியலாய்..
விரியத்தொடங்கினாள்

பின்,
ஒல்லியும் பால்நிறமுமான
அவள் மென்தேகங்கள்
அவன் உடல் உரச
மென் வாசனையாய்க்கிளர்ந்தன.

உடைத்தெறிய முடியாப் பாறைகளை
சிறு நுனிவிரலால்
கிளப்பியெறிகின்ற லாவகம்
அவள்மீது பொதிந்து பொதிந்து
உறங்கிக்கிடந்த அருட்டல்கள்
சொல்லமுடியாதவிரிகைகளைக்
கோர்த்துக்கொண்டு
முட்டியெழுந்து நிற்கிறது அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதை!
எல்லைகளைக்கடந்தவள்
அற்பங்களின் அவசரங்களை
கணக்கில் எடுக்காது
பயணிக்கின்ற தேவதை
புழுவொன்றின் வேதனையறியாள்.

பின்னொரு நாள் அவள்
இறக்கைகளின் வளர்தலுக்காய்
சூரிய தேவதையின் காலடித்தடம்
தேடிப்பயணித்த நாள் ஒன்றில்
தேவதை கட்டியணைத்து
முத்தமொன்றையிட்டாள்

05.05.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பை வாசித்துக்கொண்டிருக்கின்றேன்

எனக்குத்தெரிந்த காலம்வரை
இந்த ஊரின் எல்லைகள்
காணாமல்போவதும்
கண்டுபிடிப்பதும்
நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

நிலங்கள் நகர்கின்றன
வாய்பேசமுடியாத பூமித்தாய்
கூனிக்குறுகிப் படுக்கின்றாள்
மரங்கள் முளைக்கின்றன
மடுவுகள் உருவாகின்றன
இறகு முளைத்த காற்று
சில்லென எழும்பும் ஓசையில்
ஓராயிரம் மரங்கள் முறிகின்றன

அவர்கள் இன்னும்
உதைத்துக்கொண்டேயிருக்கிறார்கள்
புழுவின் வாழ்வில்
சிக்கி நிற்கும் துயரத்தை
காறித்துப்பித்துப்பி
அவர்கள் முளைத்தெழுகின்றனர்.

அடிபட்ட பாம்புகள்
சுருண்டுபடுக்கின்றன
எப்போ தீண்டுமென அவர்கள்
கம்புகளை ஏந்தியவண்ணம்
உயிரின் ஓரத்தில்
உறங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம் மெடுப்பதற்குக் கூட
சக்தியற்று உறங்குகின்ற
பாம்புகள்
இனி எழாது.

பாம்புகளின் காலம் முடிவுற்று..
புற்றுக்கள் தகர்க்கப்பட்ட
நாட்களின்குறிப்பை
இன்று நான்
வாசித்துக்கொண்டிருக்கின்றேன்.

03.02.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணத்தின் நிழலில்

நான் எல்லாவற்றையும்
துறந்து நிற்கின்றேன்
உன்னுடைய கனவில்
முகிழ்ந்த நாட்களின் மகிழ்வுகள்
பழைய ஓவியங்களைத்தேடுகின்றன.

துர்நாற்றம் வீசுகின்ற
பழைய காதைகளை
நீ படிக்கத்தொடங்குகிறாய்
எல்லாவற்றிலும் சாட்சியங்களாய்
உருமாறுகிறாய்.

என்னைக்கொடூரனாக நீ,
பறைசாற்றுகின்ற..
நீழ்கதைகளைப்புனைந்து
பெருமைபெறுகின்றாய்.

நான் தீப்பிளம்பில் ஊழிக்கூத்தாடும்
வல்லமைகொண்ட ஒரு பிரதியின் உருவாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசப்பட்டுப்போன காலத்தின் முன்
மண்டியிடாத
மரணத்தின் நிழலில்
நான் அமர்கின்றேன்.

எந்தத்தவறும் என்னிடத்திலில்லை
பொம்மையைத்தொலைத்து
அழுகின்ற
குழந்தையைப்போல்
கனவுகளின்வேர்களை விழுங்கிக்கொண்டு
என்னைத் துறத்துகின்ற
காலப்பொதிகை
கழுத்துவரை
நீரை நிறைத்துள்ளது.

வாழ்வின் கொடுமுடிச்சு
அவிழ்க்கப்படாது...
கட்டப்படுகின்ற மரங்கள்
எப்பொழுதும் முறிந்துவிழாது
இருக்குமா?

பல்லியின் வாழ்வையொத்த
என் நெஞ்சத்துப் படுக்கைகள்
பூச்சியாய் பறக்க எத்தனிக்கின்ற...
மாலைப்பொழுதொன்றில்
இருப்பின் கதவுகளை
மூடி... எழ
அப்போ,
நான் மாயத்தின்
தோற்றத்தைக்கண்டேன்.

10.03.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியகாற்று

மிகச்சரியாகக்கணிப்பிடும்
அட்சரத்தில் உறங்கியபின்
நான் எல்லாவற்றையும் அழித்து
நீள நினைக்கின்றேன்.

ஊத்தைகள் நிறைந்த குட்டைகளை
இறைத்துக்கொண்டு
புது ஊற்றுக்களை
மெல்லமெல்ல
உருவாக்க முயல்கின்றேன்.

அழுக்கடைந்த மனம்
பெருவொளியின் அருகில் செல்ல
புதியகாற்றைச்சுவாசிக்கிறது.

புதிய சூரியவெளிச்சத்தைக்கிழிக்கின்ற
ஓடுபாதையில்
பயணிக்கின்ற விமானம்
எந்தவொரு பேரோசையையும்
எழுப்பாது பறக்கின்றது

இன்னுமொரு தடவை அது
என்னுள் புதைந்துவிடாது
நாட்களைக் கடக்க
நான் தயாராகிவிட்டேன்.

02.01.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேய்மழையின் பின்

அதிர்கின்ற முதல்நாளில்
நகரத்தின் சுவர்களில்
மாடுகள் முளைத்தன.

இது என் காலம்
நசுங்கிப் பிய்ந்தொழுகும் காலம்.

தியாகத்தின் வடுக்களை காலிசெய்து
பேய்கள் கூத்தாடும் வீதிகள்தோறும்
ஒரு சனமும் இல்லை
யாரும் கண்டுபிடிக்கமுடியாத
மர்மவிரிப்பில்
எல்லாம் பேய்கள் மயம்.

எந்த வெளிச்சமும் ஒளிரா நகரில்
நான் எழுதிய கவிதைகள்
சுவர்களில் துளிர்க்க...
யாரும் நகரங்களுக்குள்
நுழையமுடியாது
பேய்கள் உறைந்து
பேய்கள் உறைந்து
நகரம் சிவப்பாயிற்று.

நான்மட்டும்
அகல்விளக்கில் ஒளிர்கின்ற
திரியை ஒளிருட்டுகிறேன்.
குருட்டுவெளவால்கள்
தீயில் மோதி கரிகிப்போக..
திரியில்
ஒளிவட்டம்மாத்திரம் பிரகாசிக்கிறது.

05.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகாலகாலம்

எதையும் சொல்லமுடியாதபடி
காலம் முடிந்திருக்கிறது
அவர்களின் மொத்தநம்பிக்கையே
காற்றில் பறந்துவிட்டது

இப்படி இருக்கமுடியாதபடி
கதைக்க முடியாதபடி
காலம் முற்றுப்புள்ளிவைக்குமென
யார்தான் நினைத்தார்?

கழுகுகள் வீடுகளின்மேல்பறந்து
ராஞ்சியெடுத்து
ஒரு துளியைக்கூட ஈயாமல்
கூரைகளின்மீது உலாவுமென
யார்தான் நம்பினார்?

இப்போ எதையும் புலம்பி
என்ன பயன்தான் கிடைக்கும்?

மேகங்கள் வைரத்தைச்சூடி
காலம் தகதகத்த காலத்தில்
பெரும் கனவைத் துறந்து
காலத்தைச்சூடியிருந்தால்
வாழ்வு நாகத்தைப்போல்
படம்மெடுத்தாடியிருக்கும்
இன்று.

01.01.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகக்கீறல்களின் கதைகள் அல்லது கிறீஸ்மனிதன்

எல்லாவற்றையும் தூக்குக்கயிறுபோல்
நான் பார்க்கின்றேன்

எனக்குள் சொற்கள்
அறுந்துகொண்டேயிருக்கின்றன
எல்லாவற்றையும் எழுதமுடியவில்லை
எல்லாவற்றையும் சொல்லமுடியவில்லை
எங்கும் தேவதைகளால் வாழமுடியவில்லை

மார்பகங்கள்
நகக்கீறல்களுக்கான
ஸ்த்தனமாக
பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன

இரவுகள் என்றில்லை
பகலிலும் தேவதைகள்
நடுக்கம் கொள்கிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்துதான் பேய்கள் வருகின்றன
யாராலும் கண்டடைய முடியவில்லை
சூழ்ச்சிகளால் மூடப்பட்டபாதைகள்
குறிகளை நிரப்பிவழிகின்றன.

துயரங்களை அப்பியெழுகின்ற
கொண்டல் காற்று
தேசத்தைக்கடந்து பறைகின்றபோதும்
தீராவலியைக் கேட்பாரின்றி
காரிருள் படர்கின்றது.

குரல்கள் அசுரக்கரங்களால்
அழிக்கப்பட்ட ஆனபோதிலும்
நகக்கீறல்களின் கதைகள் முடியவில்லை.
முலைகளிலிருந்து சொட்டும்
ரணங்கள் நிறுத்தப்படவுமில்லை

01.05.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளற்ற நிலம்

தலைதெறித்த உடல்களால்
நிரம்பியிருக்கிறது
ஆளற்ற நிலம்.

காற்றின்வேகம்
காறியுமிழ்கிறது
தூரத்து பிணவாடை
மோதியகல
ஏ9 பாதையை ஊடறுக்கின்ற
எனது பேருந்து
சொல்லமுடியாத வார்த்தைகளால்
நிரம்பிப்பறக்கிறது.

வார்த்தைகள் ஏதுமில்லை
அழகிய நகரத்தின்
காலங்களைச் சொல்லிவிடமுடியாது.

தனித்தலைகின்ற மாடுகள்
கூட்டம் கூட்டமாய்
மேய்கின்ற மேச்சல் நிலங்களில்
தாகம் தீர்க்க
குருதிநீர் பருகி திமிர்கின்றன.

வானம் ஓய்ந்திருக்கின்றது
இரவு பெய்த மழையில்
ஊரையே கூட்டுகிறது நீர்.

05.10.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியன்

என்னைப்பற்றிச்சொல்லப்படுகின்ற
ஒவ்வொருவார்த்தைகளையும்
எடைபோட்டுப்பார்க்கின்றேன்
அவர்கள் பக்கம்
நிறைகூடிப்போகின்றது
நான்தராசைப்பார்த்து
மலைத்துப்போய் நிற்கவில்லை.
என் ஒவ்வொரு மயிரையும் பிடுங்க
இத்தனைபேய்கள் அலைவதுதான்
எனக்குவேடிக்கையாகவுள்ளது
நான்சாமத்தில் அலையும்
ஒவ்வொரு கணங்களும்
விசஜந்துக்கள் தோற்றுத்தான்போகின்றன.

என் வாள் துருவேறவில்லை
மௌனித்திருக்கும் கிடப்படுக்கையில்
யாரையும் ருசிபார்க்காது
உறக்கம்கொள்ளும்
வாளின் அமைதி
ஒவ்வொரு கணங்களும்
மூச்சுவிட்டேகிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுதான் அவன்
கக்கத்தொடங்கியுள்ளான்
நான் காஞ்சிரங்கொட்டைகளை
மறந்த நாட்களில்
உணவுக்குழாயில்
ஔவிடதங்கள் சுரக்கத்தொடங்கிவிட்டன
நான் கால்களை அகலவிரித்து
இந்த இராட்சியத்தின் பயணிப்பை
பின்னத்தொடங்கினேன்
நிதானம் தப்பாது
பயணம் நேர்கொட்டு பாதையை ஊடறுத்து
துருவேராத வாளை அணைத்துக்கொண்டு
ஆகாயத்தை பிரமித்துப்பறக்கிறேன்.
எல்லாவற்றையும் முகர்ந்து பறக்கிறேன்
என்னை அறுத்துவிட
நூறுபட்டங்கள்
பளபளக்கும் பிளேற்றைச்சொருகிக்கொண்டு
எல்லையின்
உச்சுவானில்
ரீங்காரமிட்டு
என்னைக்குத்த பாணங்குளவியாக
பறந்துவருகின்றன.
என் சினைப்பரில்
தலைதெரித்துவிழும்
ஜந்துக்கள்
ஆவியடங்க
பிணங்களை கழுகுகள் விழுங்குகின்றன.

16.02.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளவு முழுதும் எருமைகள் நிறைந்துவிட்டன.
காலன் மாமரத்தினுள்ளும்
தென்னம்பிள்ளையின் பின்னும்
சிங்கத்தையும், யானையையும் சூடிக்கொண்டு
அங்குமிங்கும்...

டுமீர்.. டுமீர்...
பளிர்.. பளிர்...
என் பிள்ளைகளும் நானும்.

* * *

### கால்கள் நடக்கின்றன

நீண்ட நாட்களாய்
கவிதைமனமற்றிருந்தெனக்கு
குத்து வலியென்னை
உசுப்பியது.
பாம்பொன்று ஊர்ந்து
என் இதயத்தைக்கொத்தியது.

பெருவிரலின் குபுகுபுப்பை
கைகள் அழுத்தியும்
என் கால்கள் வைத்தியசாலை நடந்தன
நான் கைதியானேன்.

பெருநதியாய்க் கொப்பளித்து
என் காலடியில் அலை..அலையென
உயிர்ப்பெருக்கு ஓடுகிறது.
ஓலம் வானத்தையுடைத்து
தொல்லொலியாய் இறங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இயலாமை நிலையற்று
வாழ்வின் குறியை..
பாடங்களாகக்கற்கிறேன்.

சூகை ஆட்களற்று
புதுமணம்பரப்புகிறது.
இருக்கைகள்
ஒன்றுவிட்டொன்று
கட்டுண்டு கிடக்கின்றன.

என் அலறல்கள் பழக்கப்பட்ட தருணத்தில்
திரைச்சீலை போட்டு
மூலஸ்தானத்திலிருக்கும்
வைத்திய நாதன்
திறனற்ற மொழியால்
காக்காக் குஞ்சுகளைப்பொரித்தான்.

வெள்ளைத்துண்டு
முக்கலும் முனகலுமாய்...

நகர்கின்றன என்கால்கள்.

பிய்ந்துபோன சதைத்துண்டுகள்
துடி துடித்தன.

தாதியின் கண்கள் பயந்து
ஒளிந்திருக்கின்றன..
புலியிடம் தப்பித்த
மான் ஒன்றின் கண்களாய்..

நான் என்ன செய்வேன்?
துவாலையைப்போல்
அறைகள் நிரைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை இறுக்கமுன்
அவளைப்பார்த்தேன்
கையை உதறினாள்
"ராணி மிஸ்சைக் கூப்பிடுங்க..."

அவள் ராணிதான்.
தேகமும்,
நிறையும்,
நிறமும்
..............
என்னுள் ஆட்கொண்டாள்.

பெருமூச்சு பிறிட்டு
அந்தரத்தில் பறந்தது...

"ஆறு தையல்"

முதுகில் அவள் கை
பாறாங் கல்லாக இறங்கியது.

நிரந்தரமற்ற தேகத்தின்
வஸ்திரத்துண்டு
என் கண்கள் முன் திறக்கப்பட்டது.
மீண்டும் உயிர்ப்புக்கொள்ளும்.

நடக்கின்றன
என் கால்கள்.

09.00.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரியாத மண்டுக்கோர் கடிதம்...

பிடறியில் நோ எழும்காலத்திலிருந்தே
நான் என்னை புதைத்துக்கொண்டே
இருக்கிறேன்.
என்னிடத்தில் எல்லாம் செத்துக்கொண்டே
இருக்கின்றன.
வார்த்தைகளை புரிந்துகொள்ளாத அசரீதி
என்னிடத்தில் குற்றங்களைக்கொட்டிக்கொண்டு
புதிதாக வால்முளைத்த
நட்சத்திரத்தின் ஒளிக்கீற்றிலிருந்து விசத்தையா
நான் உருவாக்குவதாக எக்களிக்கிறது.

பால் கடலிருந்தே
ஆலகாலத்தை தொண்டையில் தேக்கியவன்.
நூறாயிரம் அற்பப் பிறப்புகளுக்கு
உயிர் பிச்சை கொடுத்த எனக்கா?

விசம்
விசம்
விசம்

என் உதிரத்தோடு பிணைந்துபோன வார்த்தை
அனல் எழுப்ப
வெப்பம் தாங்காமல்
கருகுகின்ற ஈரல்
கால்மாக்சின் ஒற்றைகளைத்தட்டுகிறது.
இசைச்சுழற்சிக்கேற்ப
அங்குமிங்கும் சுழகின்ற
மண்டு
சுரியில் தாவி
குட்டையில் நீந்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்மாக்ஸ் மடக்மடக்கென்று விசத்தை
பருகினான்.
கோப்பையில் தாவிய மண்டு
உலகத்தை வெற்றி கொண்டதாக பறைந்தது.

வார்த்தையை மண்டு புரிந்து கொள்ளவில்லை
புறக்.. புறக்கெனக்.. கத்தியது.

நான் இருகால்களையும் நீட்டி கோப்பைக்கு முன்
அமர்ந்திருக்கிறேன்.
கால்மாக்ஸ் கண்களை விழித்துக்கொண்டே
இருக்கிறான்
மண்டு வாய்பாட்டைச்சொல்கிறது
மண்டைவலி ஒன்று
மண்டைவலி இரண்டு
......
...........
நாள் முழுதும் கேட்கிறேன்
அன்பையும்
எதிர்மறையையும்
புரியாதவனா நான்?

குற்றக்கோவைகளின்
விதிகளையும்
எடுத்துரைப்புக்களையும்
கேலிசெய்து
மொட்டைத்தலையையும் முழங்காலையும்
பதப்படுத்தி தையிலமிடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடோடியாய் திரிந்தவனுக்கு
மறுத்தோடி சொல்கிறது
பகைமறுப்பின் பாடத்தினை
நீ புரிந்து கொள்ளமுடியாதென்று.
ஊழியின் விசத்தை பருகாத வார்த்தை
மொழியின் நிழலில் படிந்துகிடக்கிறது.
இன்று இரவுமுழுதும் சவப்பெட்டியை
செய்தாகவேண்டும்.
அதுதான் எனக்கான இறுதித்தருணம்.

கால்மாக்ஸ் எழுந்து
என் கையைப்பிடித்து நடக்கத்தொடங்கினார்.
விசம் என்பது கற்பனை.
விசர்கதை
நான் உயிரோடு இருக்கிறேன்
நான் வாழ்கிறேன்.
புரியாதது புரியாதுதான்

...............

30.05.21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடல் வற்றிப்போன கொக்கு

எதிலும் மனம் லகிக்காது
குடல்வற்றிப்போன
கொக்காய் நிற்கிறேன்.
எல்லாக்கனவுகளையும் கிளறச்செய்து
மெத்தையில் சுகமாக உறங்கும் அவளுக்கு
என் அந்தரத்தின்வலி
எங்குதெரியப்போகிறது.?

போக்கற்று மனம் அலைகிறது
அவள் மூடிவைத்திருக்கும் அப்பம்
வெள்ளிக்கம்பிகளாய்ப்போன நீட்சியில்
எழாத மொந்தனின் கால நீட்சியின் பின்
கரப்பை குத்தி
விரால் பிடிப்பதில்
என்ன சுகம்?
என்ன ருசி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை அப்பங்கள் அழைத்தும்
அவளின் மென் அப்பத்தில்த்தான்
விரால் பிடிப்பேன் என்று
என் கரப்பை வெயிலில் காய்ந்து கிடக்கிறது.
நேற்று
குடல் வத்திய கொக்கு செத்துப்போனதாய்
சுப்பண்ண சொன்னபோது.
என் மூதேவியை நினைத்துக்கொண்டேன்.
யாருக்காக அந்த விரிப்பு?
யாருக்காக இந்தத்தவிப்பு
அடைக்கலச்சல்லி போல்
அது படுக்கிறது.

கனவுகளின் வேல் பாடினி
இனிவந்தால்த்தான் என்ன?
விலத்திப்போனாள்த்தான் என்ன?
என் ஓராயிரம் சிறகுகளை
பிய்த்தெறிகிறேன்.
இனி அவள் என்னில் தோன்றக்கூடாது.

16.04.2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் பாட்டம்

முரண்களின் வழியே
என் நம்பிக்கைகளை
கட்டிக்கொண்டிருக்கிறேன்.

கசப்பும்
வெறுப்பும்
ஆற்றாமையும்
எப்பொழுதும்
அறைகின்ற கன்னத்திலிருந்து
மீண்டும்..மீண்டும்
வலியற்று மீழ்கின்றேன்.

ஒரு கடலைப்போல்
தோற்றுப்போகின்ற ஆணலை
பெண்ணலையைத் துரத்துகின்ற மாயவழ்ப்பும்
என்மணல் வீட்டில்
காலம் தப்பிய மழையும்
ஆயிரம் பாட்டத்தினைப்பொழிகின்றன.

என் வாழ்வின் தடங்கள்
அங்குமிங்கும் சிதருகின்ற
பெருமணல் பரப்பில்
எந்த ஆராட்சியாளனுமில்லாது
சிறு மணல் துளியாய் மாறுகின்றன...

நானொரு ஆணலை
நீயொரு பெண்ணலை

04.11.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்குப் புன்னகை என்றொருபெயர்

தொலைந்துபோனபுன்னகையை
மீட்பதற்காய் பயணித்தேன்.
மூன்றாம் நாள் புன்னகை
உயிர்த்தெழுந்து வந்தபோது
என்னால்ஏதும்செய்யமுடியவில்லை
பாரம்சுமந்தவன்
அறுவை மாடுகளின்மிரட்சியிலிருந்து
மீண்டு வந்தான்.

முன்னொரு காலம் அவன்
........தெருக்களில்
முட்கிரீடங்களைத்தரித்து
நடந்துபோனபோது
அவன் முகத்தில்
இதே மிரட்சியே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபடியும் புன்னகை தொலைந்தது
மீண்டும் நான்
காணாமற்போன
புன்னகையை மீட்கத்திராணியற்று
எதிரியின் குளம்படிஓசையில் வீழ்ந்துபோனேன்.

முட்கிரீடம் தரித்ததெருக்களில்
நடந்துபோனவன்
மீண்டும் எழவில்லை
மூன்று நாட்கள்
முதிர்கன்னிகளுடன்
காத்திருந்தேன்
அவன் வரவில்லை.

இப்போ,
தொலைந்துபோன புன்னகை பற்றிக்
கதைப்பார் யாருமில்லை

ஆனால்,
எனக்குப்புன்னகை என்றொரு
பெயர்

12.01.20014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறங்குகின்ற விம்பம்

எப்போதும் வாழ்வின்
இருப்பைப்பற்றிப்பேசாத நீ
சற்றுநேரத்தின் முன்னிருந்து
தொடங்கியிருக்கும் துவக்கம்
இருளில் மின்னுகின்ற மின்மினியாய்
நீ எனக்குள் படர்கின்றாய்

விசம் படர்ந்த இப்பூமியில்
முளைத்திருக்கும் அழுக்குக்கரங்களிலிருந்து
நீ எப்படி உயிர் வாழ்வாய்?

நீ சொல்கின்ற
ஒவ்வொரு பெரும்கதையாடல்களும்
எனக்குள் விழுந்து
பெரும் விருட்சமாக முளைக்கின்றபோது
உன் இருப்பின் தொடக்கம்
எனக்கு
கானல் நீர்களில் அசைகின்ற
படிமமாய் விழுகின்றாய்.

கண்களிரெண்டும்
உன்விம்பத்தை நிரப்பி
எனக்குள்ளே உன்னை
இறக்குவதைவிட
இப்போது அதுதான் என்னால்
முடியும்.

01.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரேநாளில் பறந்தது பற்றி

உலகத்தைப்பார்த்த ஒரே நாளில்
என் பச்சமண் பறந்துவிட்டது
அது எத்திசையில் பறந்ததென
நானறியேன்
சாமூலையால் பறந்ததாய்
தெற்கத்து நாடோடி கூவிப்போனான்

அப்பறவையை நான்
எங்கெனம் இனிக்காண்பேன்?
நீ பறந்துவிட்டாய்
உலகத்தின் சிறகுகளை
உதிர்த்திவிட்டு
புதுரெக்கை கட்டி எப்படிப்பறந்தாய்?

உன் பிஞ்சுமுகம்
எனக்குள் நடந்துபோகிறது
உன் பிஞ்சுக்கால்கள்
என்னை மிதித்துப்போகின்றன
நீ....நீ....நீ...

அடர் மரங்கள் நெருங்கியிருக்கும்
வெம்புமண் புதையல்காட்டில்
ஒளி உதிரும்
காலைவெயில் பொழுதில்
உன் வரவுக்காய் காத்திருக்கின்றேன்

புழுதி நெடி
காற்றில் அள்ளுண்டு
கைக்கிறது தொண்டையில்.

29/30.06.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதங்க ஆலிங்கனம்

மாளிகையின் நிலவறையில்
பூத்ததன் ரோஜா
நாகத்திடம் தீண்டப்பட்டதை
அவன் ஏற்க மறுத்தான்

ரோஜாவின் மதமதப்பில்
நாகம் அள்ளுண்டபோது
அவன் தன் படுக்கையை எரித்து
நடக்கத்தொடங்கியிருந்தான்
நீர்ப்பாறைகளின் நடுவில்
முதலைகளின் புணர்தலை நீக்கி
அவன் எழுந்தபோது
சந்திரன் உச்சியிலிருந்து
சாய்ந்துவிழுந்தான்.

படுக்கையறைகளின்
செடிகளின் வளர்தல்
கொய்யப்பட்ட தினமொன்றில்
ரோஜா தன் இதழ்களை இழந்தது
சிவந்த மொட்டினைத்திறந்தழைத்து
மதாளிப்பின் நுனித்துளிர்கை
நாகத்திடம் அடங்கிப்போக

பிறிதொரு நாள்
ரோஜாவின் மதங்காலிங்கனம்
அவாவிக்கிளர்ந்தன.

01.05.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாவது யுகத்தில்

என்னைப்பற்றி நூறுமூட்டைகள்
அவிழ்கப்பட்டபோதும்
நான் உயிர்க்கின்றேன்.

ஊர்ந்து திரிகின்ற நச்சுப்பாம்புகள்
கொத்தும் என்று சொல்லும்
கணங்களை
நான் எப்போதும்
கவனத்தில் எடுத்ததில்லை
பாம்புகள் எப்போதும்
மகுடிக்கு அள்ளுண்டு போகும்

நான் எந்த எரிச்சலூட்டும்
மகுடியினையும்
ஆசைகொண்டு கவர்ந்திழுத்து
ஓடியதில்லை
இனிவரும் ஐந்தாவது யுகத்திலும்
தனித்துத்திரியவே
ஆசைகொள்கின்றேன்.

என்னைக்கொத்த அலைகின்ற
நச்சுப்பாம்புகள்
செட்டையற்று சுடுமணலில்
இறக்கின்ற கணங்களில்
நான் உயிர்பிச்சைகொடுப்பேன் காண்.

03.01.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீள்கிறது நாள்

மிகத்துக்கமான இரவு நீள்கிறது
குரலற்ற பறவைகள்
பறந்துபோகின்றன.
கறுப்பு மேகங்கள்
ஒளிர்க் கூர்களைக்கடந்து
வானத்தை மறைக்கின்றன
நான் அவன் நினைப்பில்
மூழ்கியிருக்கின்றேன்.

நேற்று அவன்
குரலொலித்தான்
இன்று,
தெருவில் ஏதுமற்றுக்
காற்றோடு கலந்துவிட்டான்.

'அறம்' தளைத்தோங்கும் வீதியில்
சித்தாத்தன் நடந்து போகிறான்.
அசோகனும் பின் நடந்து போகிறான்.
"துர்நாற்றம் வீசுகிறது.சுவாமி"
என்றாள் சங்கமித்திரை
"கபாலம் பொசுங்கிய நாற்றம் சுவாமி"
என்றான் அசோகன்.
"நடப்பது நடக்கட்டும் நடவுங்கள்"
என்றான் சித்தாத்தன்.

இவ்வளவுதான்.
சந்நியாசி நடந்துபோகிறான்
"சுவாமி"யெனக் கூப்பிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன?"

"நேற்றிருந்த உரு இன்றில்லை
துயிலெழுப்பி விடுங்கள் சுவாமி"

"இழவு விழா வீடேகி
கடுகு கொணர்வாய்,
நான் துயில் நீக்குகிறேன்."

இவ்வளவுதான்
என் பார்வை தேடுகிறது
அவனை

காற்றில் கலந்த குரல்
என் காதில் விழாது
வீதியில் அலையெழுப்புகிறது.

கடுகு
கடுகு
கடுகு

ஆயிரமாண்டு வாசல்படிகள்
பூமிமுழுதும் வீழ்த்தப்பட்டன.

சித்தாத்தன் நடந்துவருகிறான்.

காலமாகி
சாவின் நிஷ்டையில்
உறங்குகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுவாமி"

என் குரல் காணாமல் போகிறது.

"கடுகு இருக்கா"

"கடுகு கறுப்பையிழந்து
காலத்தில் மடிந்துவிட்டது"

தேவதைகளும்
இரவுகளில் தேடுவதாக
ஊர்பேசுகிறது சுவாமி!

என்ன செய்வேன் ?

"போ !
முடியாது!"

கடுகு!
கடுகு!
கடுகு!

* சுவாமி!நீங்கள் முற்றும் துறந்
தவர்.முடியாதென எதுவுழோ?
அறம்பிழைத்து அடாவடித்தனம்
ஓர் பக்கம் ஓங்கியுள்ளது.
அடக்கவேண்டும்சுவாமி! *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதெனால்

அரசியல் பிழைத்தோறுக்கு
அறம் கூற்றாகும்
சரணம் சரணம் கச்சாமி

நாய்களின் ஊளையொலி
நிலம் முழுதும் அதிர
எந்த எருமைகளையும் நான் காணவில்லை
என் மண்டையில்
அவன் நினைப்புத்துடிக்க
காவிவேட்டியைக்கிழித்து
தலையில் கட்டிக்கொண்டு
மேய்ப்பவனைத்தேடி
நீள்கிறது நாள்

10.11.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாலாயிரம் புத்தகங்களைச் சுமக்கின்ற பொழுது

இந்த நூற்றாண்டின்
பெரும் சோகத்தை
சுமந்து நிற்கின்றேன்.
கவிதை எழுதுபவன்
சிறுகதை எழுதுவதற்கும்
சிறுகதை எழுதுபவன்
கவிதை எழுதுவதற்கும்
மிகமிகத்திறன் கொண்டவனாய்
படைக்கப்பட்டிருப்பதை நினைத்து
மதுக்கிண்ணத்தை நாடா
என் மனம்
மிடாக்குடியனாய் மாற
அவாவுகிறது.

அவனுடைய சுற்றுப்பாதையை
விலக எத்தனிக்கும்
ஒரு காலைப்பொழுது
புழுதி படிந்த ஏட்டினுள்
நூற்றாண்டுகளைக்கடந்த
கவிதைகளை
வாசிக்கத்தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டுகொண்டேபோயின
பொழுதுகள் மறைந்துகொண்டே நகர்ந்தன
கவிதைகளின் ஆழம்.

பாலை நிலத்தின் பாடினி
தன் சோகங்களை
உதறிக்கொண்டேயிருந்தாள்
தொலைந்துபோன
இரண்டாயிரம் ஆண்டுகளின்
அரூபத்தை நினைத்து.

வைரங்களால் செதுக்கப்பட்ட
சொற்கள்
உடல்முழுதும் பரவி
மேலிருந்து கீழிலிறங்கின

ஊர் முழுதும் சுற்றி
மணற்பெருவெளி முழுதும்
அலைந்து
காலங்களைக் கேள்விகேட்கும்
கவி
மீதெழும் பரவசங்களை
மயிர்க்கால்களால் வடிக்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு சுவர்களுக்குள் வாழும்
பல்லிப்பூச்சைப்போல்
எலிப்பொறிக்குள்லிருக்கும் பாடினி
மண்டையைக்கழுவிக்கழுவி
வெளவால்சட்டையைப்பெற...
வீடுமுழுதும் முளைத்த கவிதைகள்
உச்சாணியில் சொருகிப்பறக்கின்றன.

கவி ! நீலவெளிச்சங்களை
அள்ளிச்சூடி
நாலாயிரம் புத்தகங்களை
சுமந்து செல்ல...

தமிழ்..
வீச்சுவலையில் பட்ட
மீன்களைப்போல்
செம்படவனின் கூடைக்குள் துடிக்கிறது.

26.11.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'அஞ்சி' மரைக்கால் பல்லன்

ஆளரவமற்றுத் தூங்குகின்ற
இரவை
என் மகன்
அடித்தெழுப்புகிறான்.

எல்லா வகைத் தந்திரங்களையும்
கையாண்டும்
அவன் குரலே
ஊர் எல்லைவரை
கூக்குரலிடுகிறது.

'அஞ்சி' மரைக்கால் பல்லன்
என்வீட்டுச் சாளரத்தில்
அதிர்வை எழுப்பியும்
என் மகனின் அலறல்நின்ற பாடில்லை.

அம்மம்மா மொக்காடிட்டு
அடித் தொண்டையில்
பாசாங்கு செய்தும்
அவன் அசையவேயில்லை.

o

இரவு இப்பொழுது கொடுமையானது
கூச்சலிட்டுப்பறக்கும் அரவங்கள்
சொல்லால் எழுதிட முடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோளில் ஏறியுள்ள பேய்
சிரசைத் துவம்சம் செய்ய
எந்தநிமிடமும் தயாராகயிருக்கிறது.

அவன்'பீப்புள்ள'
அவனுக்கு ஏதுபுரியும்?

0

படு மகனே!
படு மகனே!

படு!
படு!

ஆமிக்காரன் போறான் மகனே!
படு மகனே!
படு மகனே!

'அஞ்சி'மரைக்கால் பல்லன்
வாறான் மகனே!
படு மகனே ! படு!

மெதுவாக ஊர்ந்து வந்த
சோளகக்காற்றில்
அவள் குரலடங்கிப்போக....

அவன் அசையவேயில்லை.

18.03.2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதியமுட்டை

உன்னைப்பற்றி மீண்டும்
நான் பேச விரும்பவில்லை
பேசுவதற்கு என்னவிருக்கு?

கணம் தப்பினால்
தலைபறக்கும்
எமது வாழ்வு
ஓர் அற்பம்.

இடியோசை கேட்காதசெவிகளின்
நாட்களை நாம் காத்திருந்தும்
அகண்ட வெளியில்
வெறும்
திட்டுக்கள்
குழிகள்
குண்டுகள்
சிதிலங்கள்

0

தலைக்கு மேலால் பறக்கும்
எஃகு
எந்தக் கருணையற்றும்
கீழ் இறங்கி
மேல் பறந்து
புதிய முட்டைகளையிட்டே
கடக்கிறது.

01.10.2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீ நாக்கு

தெருவில் நடந்து திரிய முடியாதபடி
அனல் எழுப்புகிறது வெக்கை
பொசுங்குகின்ற மேனி
அச்சத்தின் இழிவில்
மெல்லிய சிதிலமாய்
உதிர்கிறது..
பழுத்த இலையைப்போன்று.

சூரியனில் பிறந்த வெக்கை
அனல் எரிக்குமென
யார்தான் நம்பினார்கள்?
கிழக்கு வெளுத்திருப்பதாகவே
முதலில் கூக்குரலிட்டீர்கள்
நான் சொன்னதை நம்பவேயில்லை.

வெக்கை குளிரல்ல
தீ நாக்கு
கம்பளியாய் மாற
தருணங்கள் சாத்தியமாவதில்லை.

வெக்கை இரவுகளில்
புழுக்கத்தை அவிழ்த்தேகிடக்கும்
மின்விசிறிக் குளுகுளுப்பு
ஒரு தீர்வென
நீங்கள் உறங்கும் காலம்
நச்சுக்கொடிபோல்
எப்போ விழுங்குமென
என்னால் சொல்லமுடியவில்லை.?

01.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொட்டளவு பச்சமண்

இன்னும் நெஞ்சு காயவில்லை.

தன்னியற்று....
என் பச்சமண்ணணின் நினைப்பில்
கண்ணயராது
இராத்திரியைக்கடக்கின்றேன்.

மூன்று நாட்கள்
என்நெஞ்சில்
கல்லையிறக்கி...
என்னுயிர்
காலற்ற 'திலாந்தாய்'
வீழ்ந்துகிடக்கிறது.

யாரிடம் சொல்வேன்?

குஞ்சுக்கண்ணைச்சிமிட்டி
தாதியின் கைக்குள்
ஒரு பூனைக்குட்டியாய் சுருண்டுகிடந்த
பதக்கடையை
நான் யாரிடம் சொல்வேன்?

குஞ்சு ரோமங்கள் விரவிய
உன் சிவந்த யவ்வனத்தை
யார் தொட்டழைத்தது?
எக்கரமுனை வீழ்த்தியது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்..?
யார்...?

பேரிடியின் யுகங்கள்...
இரைகின்ற கடலில்
என் உயிர் அறுந்துபோகிறது....

ஞாபகத்தின் இடிபாடுகளில்
உன் முகம்
உன் குஞ்சுக் கண்
உன் குஞ்சி வாய்
உன் பிஞ்சுவிரல்கள்
.....
...........

வேறு எதுவும்...
இப்போ,
என் நினைவிலில்லை.

27/28 .06.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்மாக்ஸ்சை வாசித்த இரவு

இரவு முழுதும்
ஒலிபெருக்கியில்
ராசா
உளறிக்கொண்டிருந்தான்.

......
...........

"எங்களைக்காப்பார்"
......
...........

பழகிப்போன வார்த்தைகளைக் கேட்டு
நான் எனது படுக்கையில்
உறங்கிக் கிடந்தேன்.

முன்பும்
இப்படிந்தான் ஊர்முழுதும்
ஒலித்தன.

ராணியும் வந்தாள்
ஏதும் நடந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்று ஒவ்வொரு காலமும்
மாறி மாறி வீசுகிறது
இம்முறை
புழுதி படிந்த தெருக்களில்
அம்மணமாய்க் காத்திருக்கு
மௌனை
எந்தக்காற்றும் அடித்துச்
செல்லவில்லை.

பொழுதொன்றை உருவாக்க
பல சூரியன்களைச்சூடியிருந்தேன்
ஆனால் அவை அஸ்தமித்துப்போயின.

ஒளியினை மீட்கும்
எனது பயணத்தில்
அவனும் வந்தான்.

அப்போ,
நான்.
கால்மாக்ஸ்சை
வாசித்துக்கொண்டிருந்தேன்.

அவன் ஏதும் பேசவில்லை
மௌனங்களை நிரப்பி
அறைகளை உருவாக்கினான்.

நூறு.. நூறாய்...

பாலொளியில்லா வானத்தில்
ஒன்றோ இரண்டோ
குருட்டு நட்சத்திரங்கள் மின்னின..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் என்னோடு இருந்தான்.
கால்மாக்ஸ் அன்றிரவு வந்தார்
மூலதனத்தை விரித்து
புதிய காதையைத்தொடங்கினார்.

அவர் குரல்
நூறு..நூறாய் ஒலித்தது.
......
நான் மீண்டும் கால்மாக்ஸ்சை
வாசிக்கின்றேன்.

26.12.2010.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருடா கண்ணீர் விட்டாரா?

துக்கமுற்ற முகத்துடன்
இரு மனிதர்கள்
கால்களற்றுப் பறப்பதாக
போர்ஹேறா சொன்னான்.
நான்
மனம் ஒப்பாமலே
அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

கண்கள் பூத்து வெறுப்படைந்த
கணங்களைக் கழிக்கத்தொடங்கிய நான்
சிதிலங்களாய்ப்போன இதயத்தை
வைத்துக்கொண்டிருந்தேன்.
மூன்றாம் சாமம் கழிந்து போயின
அவர்கள் வந்தபாடில்லை
போர்ஹேறா அற்பப்பிறப்பாய்
என்னைப் பார்த்தான்.

கவிதைகளை அடுக்கி
நெருப்பிடத் தொடங்கினேன்
அவை சுவாலையிடத் தொடங்க...
அக்கணம் அவர்கள்
என்முன் நின்றார்கள்
உயிர் மயிர் கூச்செறிந்த
காலங்களின் பாடல்களை
அவர்களுக்கு,
அணைத்தெடுத்த ஏட்டிலிருந்து
காண்பிக்கத்தொடங்கினேன்.
நெருடா கண்ணீர்விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் நெருடா
மாளிகையின் தங்கரதத்தில்
மிகச்சரியென அவர் கணித்த-
புழுகினை உடைத்தார்.

'எல்லாம் பொய் அப்படி நடக்கவில்லை'

.........

..................

நெருடாவின் கழுத்திற்காய்
பல கழுகுகள் வட்டமடிக்க...
நெருடா அக்கணமிருந்தே....
செய்தியற்றுப்போனான்.

30.12.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்ச்செல்வன்,
தான் வாழும் சமூக
உணர்வுகளின் அடுக்குகளை,
தனது எண்ணங்களில்
தொற்றிக்கொள்ளும்
வடுக்களை தனது
கவிதைகளில் தனித்துவத்துடன்
வெளிப்படுத்திவருகின்றார்.
கவிதைக்குரிய காட்சிப்படுத்தலும்
சாதாரண சம்பவங்களை
பின்னிப்பிணைத்து
கவிதைகளைத்
தொன்மங்களுடன் முடிச்சுப்
போடும் பாங்கும் அவருடைய
கவிதைமொழியின் தனி இயல்பு.
பின் நவீனக்கூறின்
உட்பாய்ச்சலும், தொன்மக்
கட்டுடைப்பின் உருவேற்றலும்,
படிமத்தின் சுருட்டல்களும்
விரிந்த தளத்தை
இவரின் கவிதைகளுக்கு
கொடுத்துவிடுகின்றன.

cover rashmy

ISBN 978-81-9078-917-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org